பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 02 புதன்கிழமை 18.09.2024 கதிர் 315

## இனி இது ரகசியம் அல்ல!

நாளொருமேனியும்பொழுதொரு வண்ணமுமாக தமிழ் அரசுக் கட்சியின் உள்வீட்டு அரசியல் மெருகேறிக்கொண்டேஇருக்கின்றது. கட்சித் தலைவருக்கே ஒரு ☞ 2

## தமிழ்த் தேசிய அரசியலை மாத்திரம் முன்னிறுத்தி ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது பின்னடைவே

### யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள் தமிழ் மக்களுக்கு அறிவுரை

தமிழ்த் தேசிய அரசியலினை மாத்திரம் முன்னிறுத்தி, சர்வதேச கவனத்தினை ஈர்ப்பதனை நோக்கமாகக் கொண்டு தேர்தலிலே வாக்குக் கோருவதும், தமிழ்த் தேசிய அடிப்படையிலே தேர்தலினைப் புறக்கணிப்பதுவும் அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும். பொருளாதாரரீதியிலேமோசமாகப்பாதிக்கப்பட்டிருக்கும் எமது சமூகங்களும், ஊழல் மற்றும் ஏனைய சீர்கேடுகளினால் பாதிக்கப்பட்டுள்ள எமது பொது நிறுவனங்களும்முன்னேறுவதற்குஇந்தத்தேர்தல்கள் ஏதாவது வழியில் சந்தர்ப்பங்களைத் திறக்குமா என நாம் சிந்திப்பது அவசியம். இதன் மூலம் எமது பொருளாதார நிலையிலும் நாம் முன்னேறங்களைக் கொண்டுவரமுடியும். தென்னிலங்கையில்இனவாதம் சற்று அடங்கி இருக்கும் இந்த வேளையிலே, ஒட்டுமொத்த இலங்கையிலும் ஜனநாயகத் தன்மை மிக்க, இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தினை வலியுறுத்தும், அரசியல் மாற்றம் ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பாக நாம் இந்தத் தேர்தலினை நோக்குவது பொருத்தமாக இருக்கும் என நாம் கருதுகிறோம்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர்கள் மற்றும் ☞ 8

## ஹக்கீம், ரிஷாத், சுமந்திரன் எல்லோருமே ஏஜென்ட்கள்

### வடமேல் மாகாண ஆளுநர் சீற்றம்

ரவூப்ஹக்கீம்,ரிஷாட் பதியுதீன், சுமந்திரன் இவர்கள் எல்லோரும் ஏஜென்ட்கள். இவர்கள் கட்சிகளை வைத்து வியாபாரம்செய்பவர்கள். தமிழ் சமூகத்தை சீரழித்து வருபவர்கள் என வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

வடமேல் ☞ 8

## ராஜபக்சக்கள் மீதான குற்றச்சாட்டுகள் வெறும் அரசியல் சேறு பூசல்களே

### நாமல் தேர்தல் உரை

லஞ்சம், ஊழல் தொடர்பில்ராஜபக்சக்கள் மீதானகுற்றச்சாட்டுக்கள் அனைத்தும் வெறும் அரசியல்சேறுபூசல்களே என்று ஸ்ரீ லங்கா பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச ☞ 9

## வடமேல் மாகாணத்தில் அபிவிருத்திக்கு முயற்சி

### வாகன உற்பத்தி தொழிற்சாலையை திறந்து வைத்து ரணில் தெரிவிப்பு

வடமேல் மாகாணத்தில் பெரும் அபிவிருத்தியை மேற்கொள்ள முயற்சிக்கிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் வாகன உற்பத்தித் துறையில் தனித்துவமான ஒரு திருப்புமுனையைக் குறிக்கும் வகையில், குளியாப்பிட்டிய வெஸ்டர்ன் ஒட்டோ மொபைல் அசெம்ப்ளி பிரைவேட் லிமிடெட்டின் நவீன வாகனங்களை ஒருங்கிணைக்கும் தொழிற்சாலையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் ☞ 9

## கடந்த ஜனாதிபதித் தேர்தலை போன்றே இம்முறையும்

# தமிழர்கள் அனைவருமே திரண்டு சஜித்துக்கே வாக்களிக்கவேண்டும்

### தமிழ் அரசுக் கட்சியின் பரப்புரைக் கூட்டத்தில் சுமந்திரன் அழைப்பு

கடந்தஜனாதிபதித்தேர்தலில்ஒன்றுதிரண்டு ஒற்றுமையாக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்ததைப்போல்இந்தத்தேர்தலிலும் தமிழ் மக்கள் திரண்டு ஒற்றுமையாக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை ஓர் அன்புக் கட்டளையாக நான் உங்களிடம் முன்வைக்கின்றேன் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஏற்பாடு செய்திருந்த பரப்புரைக் கூட்டம் யாழ். நல்லூர் கிட்டு பூங்காவில் நேற்று செவ்வாய்க் கிழமை மாலை நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற மூன்றுஜனாதிபதித்தேர்தல்களிலும்நாங்கள் தேர்ந்தெடுத்து அறிவித்த வேட்பாளருக்கு எங்களுடைய மக்கள் 80 சதவீத ☞ 2

## வடக்கு கிழக்கு மக்கள் தெளிவாக உள்ளார்கள்

### டகள்ஸ் கூறுகிறார்

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதில் வடக்கு கிழக்கு மக்கள்தெளிவாக இருக்கின்றார்கள்.தேர்தல் தொடர்பில் நீண்ட கால அனுபவங்கள் அந்த மக்களுக்கு இருக்கின்றது.

என்றுகடற்றொழில்அமைச்சர்கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் நேற்று நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் ☞ 8

## நோயாளி குணமடைகையில் வைத்தியரை மாற்றி விடாதீர்

### ரணில் விக்கிரமசிங்க மக்களிடம் கோரிக்கை



கவலைக்கிடமான நிலையில் இருந்த நோயாளி அவசர சிகிச்சைக்குப் பின்னர் குணமடைந்து வரும் நிலையில், அந்த வைத்தியரை மாற்றி, தகுதியற்ற வைத்தியரின் கீழ் சாதாரண வார்டில் அனுமதிக்கும் தவறை செப்டெம்பர் 21 இந்நாட்டு மக்கள் செய்யக்கூடாது என்று ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கதெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற அரச சேவை ஒன்றிணைந்த தாதியர் சங்கத்தின் '2024 தாதியர் மாநாட்டில்' கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை பொருளாதாரத்தின் எதிர்காலம் என்பது மக்களின் எதிர்கால மாகும். எனவே, இந்தவாய்ப்பை நாம்புத்திசாலித்தனமாக பயன்படுத்த வேண்டும். அன்று இந்த நாடு இருந்த நிலைமையை நான் புதிதாகக் கூறத் தேவையில்லை.

மருத்துவர் ஒரு நோயாளிக்கு சிகிச்சை அளிக்கமறுத்தால்என்ன நடக்கும், அதுகுறித்து இலங்கை மருத்துவ சபைக்கு ☞ 2

## 2ஆவது விருப்பு வாக்கை போடக்கூடாது தமிழர்கள்

### பொத்துவில் முதல் பொலிகண்டிவரை போராட்டக் குழு அறிக்கை

இரண்டாம் விருப்பு வாக்கு என்ற விடயத்தை தமிழர்கள் முற்றாக புறந்தள்ளவேண்டும் என்று பொத்துவில் தொடக்கம்பொலிகண்டிவரைஎன்றமக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலையொட்டி அந்த அமைப்பு விடுத்த

இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்காவின் சனாதிபதி தேர்தலானது தமிழர் தேசத்திக்குரிய தேர்தல் அன்று. அது சிங்கள பேரினவாதம் தமது நாட்டிக்குரிய தமதுஅதிபரைதேர்வுசெய்யும்தேர்தலாகும். தற்போது போட்டியிடும் வேட்பாளர்களுள் எவர் சிறப்பாக இனவாத கோட்பாட்டினை முன்னெடுத்துச்செல்வார்எனசிங்களதேசம் தெரிவு செய்யும் தேர்தலே ஆகும். இந்த தேர்தலில்தமிழ் மக்களின் அபிப்பிராயங்கள் எவ்விதத்திலும் கணக்கில் கொள்ளப்படப்போவதில்லை. சிறிலங்கா தேசத்தில் முதல் சனாதிபதியாகிய திரு ஜே ஆர் ஜெயவர்த்தனமுதல்தற்போது மக்கள் ஆணையின்றி பின்கதவால் சனாதிபதி ☞ 9

## சஜித்தின் வெற்றியை ஆதரவாளர்கள் அமைதியாகக் கொண்டாடவேண்டும்

### டலஸ் அழகப்பெரும எம்.பி. அழைப்பு

சஜித்தின் வெற்றி உறுதி. அவரது வெற்றியை ஆதரவாளர்கள்அமைதியாகக் கொண்டாடவேண்டும்என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ☞ 2

## இல்யாஸுக்கான வாக்குகள் இனி செல்லுபடியற்றவையே

### தேர்தல் ஆணைக்குழு முடிவு

உயிரிழந்துவிட்ட ஜனாதிபதி வேட்பாளர் மொஹம்மட் இல்யாஸுக்கு அளிக்கப்படுகின்ற வாக்குகளை செல்லுபடியற்ற வாக்குகளாக கருதுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

ஐட்ரூஸ் மொஹம்மட் இல்யாஸ் மரணித்ததன் பின்னர் அவர் சார்பில் வேறு ஒரு வேட்பாளரின் பெயரை முன்மொழியுமாறு குறித்த வேட்பாளரை சார்ந்தோருக்கு அறிவிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

## போட்டியிலிருந்து நாமல் விலகி ரணிலுக்கு ஆதரவு தரவேண்டும்

### ராஹுல தேரர் வேண்டுகோள்

நாமல் ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தல் போட்டியிலிருந்து விலகி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று தொடம்பஹால ராஹுல தேரர் தெரிவித்தார்.

கொழும்பில்நேற்று இடம்பெற்ற நிகழ்வில்உரையாற்றுகையில் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொள்கை, கோட்பாடு, கட்டுக்கோப்பில்லை பிறகென்ன மண்ணாங்கட்டிக்கு நாங்கள் அதையெல்லாம் மதிக்கவேண்டும் என்று பலருக்குத் குளிர்விட்டுப் போய்விட்டது.

சஜித்துக்கு கட்சி ஏன் ஆதரவளிக்க முடிவு செய்தது என்று தானே அறிக்கை தயாரித்து அதனை தானே ஊடகங்களின் முன்பு வாசித்துவிட்டு, அடுத்தசிலமணிநேரத்திலேயே தனது கட்சியிலிருந்தே வெளியேறி வேறுஒரு அணியில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் அரியநேத்திரனுக்குத்தான் தனது ஆதரவு என்று மகா கேவலமான அரசியலை நடத்தும் ஒரு தலைவரின் கீழ் இருந்தால் மற்றவர்களுக்குக் குளிர்விடாமல் என்ன செய்யும்?

அதனால்தான்இதுவரையில்கள்ளஉறவில் இருந்தவர்கள் எல்லோரும் இனி அது போதும் உறவைப் பகிரங்கப்படுத்திக்கொள்ளலாம் என்று புறப்பட்டுவிட்டார்கள். வாழ்க, மாவையரின் தலைமை.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டதன் பின்னர் தமிழ் அரசுக் கட்சியை முடக்கிவிடுவது என்று அதன் தலைவர் தந்தை செல்வா உட்பட அனைவரும் முடிவு செய்தார்கள். அதன் அடிப்படையில் கட்சி முடக்கப்பட்டது. அதன் பின்னர் போர் தீவிரம்பெற்ற நிலையில் இதனை மறந்துபோனார்கள்.

பலவருடங்களின்பின்னர்ஒருநாள்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதில்ஒருதரப்பாகஇருந்ததமிழர்விடுதலைக் கூட்டணி இருந்தது. அப்போது கூட்டணியின் தலைவராக இருந்தவர் ஆனந்தசங்கரி. புலிகளுடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து (சங்கரியர் கொழும்பு ஆட்சியாளர்களுடன் சேர்ந்துகொண்டு டபுள் கேம் ஆடுகிறார் என்பதுதான் முரண்பாட்டுக்குக் காரணம்) உதயசூரியன் சின்னத்தையும்கட்சிப்பெயரையும்தேர்தலில் பயன்படுத்தத் தரமாட்டேன் என்று வழக்குப் போட்டுத் தன்வசப்படுத்திக்கொண்டார். அப்போதுதான் முடக்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சி தேர்தல் சட்டங்களின் கீழ் இன்னும் உயிர்ப்புடன்தான் இருக்கிறது என்கிற செய்தி தெரியவந்தது. கட்சியை முடக்கும் முடிவைத் தலைவர்கள் எடுத்தாலும், கட்சிப் பெயரையும் சின்னத்தையும் வேறுயாரும் கைப்பற்றிதவறாகப்பயன்படுத்திவிடக்கூடாது என்பதற்காக தேர்தல் திணைக்களத்திற்கு கட்சியின் பொதுக்கூட்ட அறிக்கைகளைச் சமர்ப்பித்து அதன் பதிவைத் தொடர்ந்து பேணி வந்திருக்கிறார்கள் என்பது தெரியவந்தது. அப்படிக்கட்சியைகனகச்சிதமாகஉயிர்ப்போடு வைத்திருந்தவர்களில் முக்கியமானவர் மாவை சேனாதிராசா. அதனால்தானோ என்னவோ தனக்கில்லாத அந்தக் கட்சி இனி யாருக்கும் இருக்கக்கூடாது என்று கங்கணம்கட்டிக்கொண்டு, அதை அழிப்பதில் மும்முரமாக இருக்கின்றார். அவர் வழியில் அவரது ஆதரவாளர்கள் இன்னும் வேகமாக வீறுநடை போடுகின்றார்கள்.

தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலானநெருக்கமானஉறவுஏற்கனவே அறியப்பட்ட ஒன்றுதான். ரணில் பதவியில் இருந்த காலத்தில் எல்லாம் அவரை அடிக்கடி சென்று சந்தித்துப் பேசி தனக்குரியதைப் பெற்றுக்கொள்வார். இது ஊடகவியலாளர்கள் பலரும் அறிந்த பரகசியம். இப்படித் தான் கொண்டுள்ள உறவு வெளியே தெரியாமல் இருக்க அல்லது கூட்டமைப்புக்குள்ளேயே இருந்த மற்றைய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலைச் சந்திப்பது பற்றியும் தமது நலன்களைப் பூர்த்தி செய்வது பற்றியும் ஊடகவியலாளர்களுக்குத் தகவல்களையும் தந்துகொள்வார். இன்னஎம்.பி. இந்தத்திகதியில் ரணிலைச்சந்தித்தார், அப்போதுஇப்படிஎல்லாம் அங்கு நிகழ்ந்தன என்று கூறிக்கொள்வார். அவர் அப்படிக் கூறும்போது அவரும் அங்கேதான், ரணிலைச் சந்திக்கத்தான் சென்றிருந்தார் என்பதைப் புரிந்துகொள்வது ஒன்றும் கடினமானதல்லவே!

அப்படி இருட்டில் இருந்த அவர்களின் உறவு இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது. நேற்று அவரது வீடு தேடிப்போய் சந்தித்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. சாள்ஸ் நிர்மலநாதனுடன் தமிழ்அரசுக்கட்சியின்மன்னார்உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், அரசியலாளர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். அவர்கள் அனைவரும் ரணிலுக்குத் ரணிலுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே, அமைச்சுப் பதவி பெறுவது குறித்து சாள்ஸ் பேசுகின்ற காணொலி ஒன்று வெளியாகிப் பரபரப்பைக் கிளப்பியிருந்தது. இப்போது எல்லாம் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது.

ஆக மொத்தத்தில் ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசுக் கட்சியை மூன்றாகச் சிதைத்துப் போட்டிருக்கின்றார். புலிகளை இரண்டாக்கினார். தமிழ் அரசுக் கட்சியை மூன்றாக்கி இருக்கின்றார். இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ரணிலுக்கு ஆதரவு, மாவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அரியநேத்திரனுக்கு வெளிப்படையான ஆதரவு, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் தமிழ் அரசுக் கட்சியும் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு. ஆகமொத்தத்தில் இந்த ஜனாதிபதித் தேர்தலை முன்வைத்து தமிழ் அரசியலைக் கையாளக் கிளம்பி, சிங்கள அரசியல் தலைவர்களால் நன்கு கையாளப்படும் நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள் தமிழ் அரசியலாளர்கள். சிறப்பு. இந்தப்பெருமையில்சந்தேகமில்லாமல் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்கு பெரும் பங்குண்டு. அவர்கள் மணிமுடியில் முதலில்மின்னும்வைரம்இது. இருப்பதையும் சிதைத்து சில்லுச் சில்லாக்கிவிட்டார்கள். இனி கிழக்குப்போன்றுமன்னாரிலும்பிரதேசவாதம் பேசிக்கொண்டுதமிழ் அரசியலாளர்கள் கட்சி அரசியல் செய்வார்கள். ''இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா?''

...............

நான் நேற்றே சொன்னதைப் போன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் 15 பேர் சேர்ந்து தமிழ் மக்களுக்கு நேற்று ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள். அந்த அறிக்கையில் அவர்கள் யாருக்கு வாக்களியுங்கள் என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை என்றாலும் தமிழ்த் தேசியத்தை மட்டும் முன்னிலைப்படுத்து இந்தத் தேர்தலைப் பார்க்கக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளார்கள்.

''தற்போதைய ஆட்சியாளர்களை நிராகரித்து, முற்போக்கானதும், ஊழலுக்கு எதிரானதும், நாட்டினதும் மக்களினதும் பொருளாதார மீட்சியிலே அக்கறை கொண்டதும், 2022 இல் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது எழுச்சியுற்ற முற்போக்கான அரசியற் பொருளாதார மாற்றங்களுக்கான கோசங்களுக்கு செயல் வடிவம்கொடுக்கக்கூடியதும், நம்பகத்தன்மை மிக்கதும், சட்டத்தின் ஆட்சியினையும், நீதித் துறையின் சுதந்திரத்தினையும் உறுதி செய்யக் கூடியதும், இனங்களை ஒற்றுமைப்படுத்தக்கூடியதுமான ஒரு எதிர்காலத்தினை நோக்கி தமிழ் மக்களும், ஏனையசிறுபான்மைமக்களும்வாக்களிப்பது பொருத்தமாகஇருக்கும்எனநாம்கருதுகிறோம்'' என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகமொத்தத்தில் அவர்கள் பூடகமாகத் தெரிவித்திருப்பது என்னவென்றால், ரணிலுக்கோ (இன்றைய ஆட்சியாளர்), அரியத்தாருக்கோ(தமிழ்த்தேசியத்தைமட்டும் முதன்மைப்படுத்தாமல்) வாக்களிக்காதீர்கள் என்பதுதான். மற்றைய இருவரான சஜித் அல்லது அநுரவில் யாருக்கு வாக்களிப்பது என்பதை அவர்கள் தெளிவுபடுத்தவில்லை. அதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள் என்று மக்களிடமே விட்டுவிட்டார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப் போல பல்கலைக்கழகத்திற்குள் இது தொடர்பில் ஒருமித்த கருத்து இல்லை, போதாததற்கு மற்றைய பல்கலைக்கழகங்களைப் போலவே ஜேவிபியின் செல்வாக்கு இங்கும் அதிகரித்திருக்கிறது என்பதுதான் அதற்குக் காரணம்.

ஆசிரியர்கள் இப்படி அறிக்கை வெளியிடுகின்றார்கள்என்றதும்பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் இளம்பிறையன் மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்களில் சிலரைத் திரட்டி மாணவர் ஒன்றியஅறையில்ஒருசெய்தியாளர்மாநாட்டை நடத்தினார். அவர்கள் வழக்கம்போல சஜித்தை ஆதரிக்க தமிழ் அரசுக் கட்சி ஏன் முடிவு செய்தது? சஜித் சமஷ்டியா தருவதாகச் சொன்னார்என்றுஅரைவேக்காட்டுத்தனமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். தமிழ் அரசுக் கட்சி ஏன் அந்த முடிவு எடுத்தது என்று மாவையரே தன்கைப்பட அறிக்கை தயாரித்துக் கொடுத்திருக்கிறாரே, அதை வாசித்துத் தொலைக்கவேண்டியதுதானே! அந்தச் செய்தியாளர் சந்திப்பில் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மிஸ்ஸிங். ஏன் என்பதை அவர் இன்று ஒருவேளை அறிக்கைவிட்டுத் தெளிவுபடுத்துவாரோ என்னவோ! பொறுத்திருந்து பார்ப்போம்.

தேர்தல் பரப்புரைக்கு இன்று நள்ளிரவு வரைக்கும் கால அவகாசம் இருக்கின்றது என்பதால் இன்றைய நாள் இனிய நாளாக அமைய உங்களுக்கு என் வாழ்த்துக்கள். (எதற்கும் இதயம் பலவீனமானவர்கள் உங்களுக்குரிய மருந்து மாத்திரைகளை பக்கத்திலேயே வைத்துக்கொள்ளவும், இவர்களில் அரசியல் கூத்துக்களை தாங்முடியலடா சாமி!)

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவிலேகூடஒன்றாகச்சேர்ந்துஒற்றுமையாக வாக்களித்து இருக்கின்றார்கள்.

அதன் மூலமாக பெரும் செய்தியையும் சொல்லி வந்திருக்கின்றார்கள். தாயகம் என்று சொல்கின்றார்கள். தாயகம் எங்கே இருக்கின்றது? அது எமது நிலத்திலே எமது மக்களிடமே இருக்கின்றது. எமது மக்கள் வாழ்வதிலேதான் அது தங்கியிருக்கின்றது.

தேசமாக நாங்கள் எழுவோம் என்று சொல்லுகின்றபோதுஒருநிலப்பரப்பிலேமக்கள் கூட்டமாக நாங்கள் வாழுகின்றபோதுதான் நாங்கள் தேசமாக இருப்போம். அந்த வாழுகின்ற உரிமையை நாங்கள் கைப்பற்ற வேண்டுமாக இருந்தால் -எங்கள் வசம் வைத்திருக்க வேண்டுமாக இருந்தால் இருக்கின்ற எங்களது இருப்பையே பாதுகாக்க வேண்டுமாக இருந்தால் பல சூட்சுமங்களை நாங்கள் செய்யவேண்டும்.

அதிலே ஒரு பிரதானமான விடயம் தான் நாட்டினுடையஜனாதிபதியைத்தேர்ந்தெடுப்பது. எங்களைக் கொன்று குவித்த முன்னாள் இராணுவத் தளபதிக்கு எங்களுடைய மக்கள் மதிநுட்பத்தினாலே வாக்களித்தார்கள். அதுவும் ஒற்றுமையாக வாக்களித்து பெரும் செய்தியைச் சொன்னார்கள்.

சிங்களவனுக்கு நாங்கள் வாக்களிக்க மாட்டோம்என்றுஎங்களுடையமக்கள்மறுத்து புறந்தள்ளிஇருக்கவும்இல்லை. பகிஷ்கரிக்கவும் இல்லை. தமிழனுக்கு வாக்களிக்க வேண்டுமென்றுசொல்லிசிவாஜிலிங்கத்திற்குக் கூட வாக்களிக்கவேயில்லை. ஆகவே, இம்முறையும் தீர்க்க தரிசனத்தோடு - தூரநோக்கோடு - மதிநுட்பத்தோடு வாக்களியுங்கள். சிங்களவேட்பாளருக்குத்தான் வாக்களிக்கப் போகின்றீர்கள். கடந்த மூன்று தேர்தல்களிலும்சிங்களவேட்பாளருக்குத்தான் வாக்களித்தீர்கள்.

இவ்வாறு கடந்த மூன்று தேர்தல்களிலும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு பிரசாரம் செய்தவர்கள் - வீதி வீதியாகத் துண்டுப்பிரசுரம்கொடுத்தவர்கள்இன்றைக்குத் திடீரென்று ஏதோ நேற்றைக்குத்தான் பிறந்தவர்களைப் போல் இன்று தான் தமிழர்களாகப்பிறந்தவர்களைப்போல்தமிழன் தமிழனுக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று இனவாதத்தைக் கக்குகின்றார்கள். யார் பேசினாலும் இனவாதம் இனவாதம்தான்.

எங்களுடைய கட்சியை மலினப்படுத்துவதற்கும், எங்களுடைய கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கும் வெளியிலே இருந்து செய்த சதிகள் ஓரளவுக்காவது வெற்றி பெற்றிருக்கின்றது என்பதுதான் எங்களது ஆதங்கம்.

அப்படியாகக் கட்சிக்குள்ளேயே இருந்துகொண்டு கட்சியை மலினப்படுத்துபவர்களுக்கு நீங்கள்தான் இறுதியிலே சரியான பாடம் புகட்ட வேண்டும். ஆகவே, மக்கள்தான் சரியான தீர்ப்பைக் கொடுக்கவேண்டும்.

இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்க்கமாக முடிவு எடுத்தது. இதை இப்படிச் சொல்லவேண்டியிருப்பதேஎனக்குவெட்கமாக இருக்கின்றது. உண்மையில் ஒரு கட்சி ஒரு முடிவு எடுத்தால் ஒரு அறிவிப்போடு முடிந்த முடிவுதான். அதனைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

மேலும் மேலும் அறிக்கைகள் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. பொதுச் செயலாளர் கையெழுத்துப் போட்டு கடிதங்கள் அனுப்ப வேண்டிய தேவையும் இல்லை. ஆனால், இன்றைக்கு அந்தத் தேவை ஏற்பட்டிருக்கின்றது. அது எங்களுடைய கட்சியை மலினப்படுத்துவதற்கும் பலவீனப்படுத்துவதற்கும் வெளியிலே இருந்து செய்த சதிகள் ஓரளவுக்காவது வெற்றி பெற்றிருக்கின்றது என்பதுதான் எங்களுடைய ஆதங்கம்.

அவ்வாறானவர்களுக்கு மக்கள் தான் சரியான பதிலடியைத் திரும்பக்கொடுக்க வேண்டும். அவ்வாறு மக்கள் கொடுக்கின்ற தீர்ப்புதான் நிரந்தரமானதும் இறுதியானதும் அறுதியானதுமாக இருக்கும். ஆகையினாலே இந்தக் குழப்பங்களையெல்லாம் காண்கின்ற நீங்கள் இந்தக் குழப்பங்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளிவைத்துநாங்கள்மதிநுட்பமுள்ள மக்கள், எங்களுக்கு வழிகாட்டுகின்ற இந்தத் தாயகக்கட்சிசொல்லியிருக்கின்றபடிதீர்க்கமான முடிவெடுத்துஎங்களுக்குஅறிவித்திருக்கின்றபடி செயற்படவேண்டும் - என்றார்.

## இல்யாஸுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும் அந்த அறிவிப்புக்கு அவர்கள் பதிலளிக்கவில்லை. அதற கமைய வாக்கெடுப்பு தொடர்பான ஆவ ணங்களிலிருந்தும் வாக்குச் சீட்டிலிருந்தும் ஐட்ரூஸ் மொஹம்மட் இல்யாஸின் பெயர் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## சஜித்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாச செப்டெம்பர் 21 இலங்கையின் 9ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். அவரது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அந்த வெற்றியை ஆதரவாளர்கள் அமைதியாகக் கொண்டாடவேண்டும். தோல்வியடையும் வேட்பாளர்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் அந்த வெற்றிக் கொண்டாட்டங்கள் அமைய வேண்டும்.

சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்கும் எந்தவொரு வாக்காளரும் ஒழுக்கமின்றி செயற்படக்கூடாது. ஒழுக்கமான நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும். எதிர்தரப்பினர் எம்மை விமர்சித்தாலும், நாம் அவற்றுக்கு பதிலளிக்க வேண்டியதில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்சவுக்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு சென்று சஜித் பிரேமதாச வாழ்த்து தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் எந்தவொரு தோல்வியடைந்த வேட்பாளரும் இவ்வாறு செய்ததில்லை. எனவே அவரைப் போன்றே அவரது ஆதரவாளர்களும் ஒழுக்கத்துடனும் நாகரீகமாகவும் செயற்பட வேண்டும் என்றார்.

## நோயாளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையிடலாம். அத்துடன், அவர்களின் மருத்துவ சான்றிதழை இரத்து செய்யலாம். 2022 இல் இந்த நாட்டின் பொருளாதாரத்தை சரிசெய்ய முடியாது என்று கூறியவர்களுக்கும், நாம் அதை செய்ய வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன்

உடல் ஆரோக்கியம் ஒருவரை மாத்திரமே பாதிக்கிறது. ஆனால் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது, எத்தனை பேர் பட்டியினால் இறப்பார்கள்? எனவே, ஆபத்தில் பொறுப்பேற்க மறுத்த தலைவர்களை நிராகரிக்க வேண்டுமா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஒரு நாடு என்ற வகையில் நாம் அடைந்துள்ளபொருளாதாரஸ்திரத்தன்மையை பின்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. இரண்டுவருடங்களில்நாட்டின்பொருளாதாரம் மீண்டுவிடும்என்றுயாரும்நினைக்கவில்லை.

அதற்காக கடினமான தீர்மானங்களை எடுத்தேன். ரூபாவை பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த செயல்பட்டேன். இன்னும் பொருளாதார சிக்கல்கள் உள்ளன. உலகில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த வேறு எந்த நாடும் நம் நாட்டைப் போன்று வேகமாக இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை.

கிரீஸ்நாட்டின்பொருளாதாரம்சரிந்தது. 07 வருடங்களாகபுதியஆடைகள்வாங்கவில்லை என ஒருவர் குறிப்பிட்டுள்ளதைப் பார்த்தேன். அவர்கள் விடுமுறையில் வெளியே செல்லவில்லை. ஆனால் எமது நாட்டு மக்கள் தற்போது அனுராதபுரம், நுவரெலியாவிற்கு விடுமுறையில் செல்ல முடியும். இந்தப் பொருளாதார வளர்ச்சியை படிப்படியாக அடைந்தோம்.

இலங்கைப்பொருளாதாரம்என்றநோயாளி சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறிது நேரம் கழித்து, நோயாளியை சாதாரண வார்டில் அனுமதிக்கலாம். 2025 ஆம் ஆண்டுக்குள்மக்களின்வாழ்க்கைச்சுமையை குறைத்து நோயாளியை சாதாரண வார்டில் சேர்க்க முடியும் என்று நம்புகிறேன். 2026 ஆம் ஆண்டிற்குள் வைத்தியசாலையில்

தொடர்ச்சி 9ம் பக்கம்....



# இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எந்தவேட்பாளரும் முன்வைக்கவேயில்லை

## நவ சமசமாஜக் கட்சியின் வேட்பாளர் பிரியந்த விக்கிரமசிங்க

ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் தேசியபிரச்சினைக்கானதீர்வைமுன்வைக்கவில்லை. தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதுதொடர்பில்தெரியாதவர்களும்இருக்கின்றனர். அவர்களுக்கு நாம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

ஏனைய பெரும்பான்மை இனத்தைப் போன்று சிறுபான்மையினரின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமது இலக்காகும் என நவ சமசமாஜக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரியந்த விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எந்தவொருவேட்பாளரும்தேசியபிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கவில்லை. தற்போது தனவந்தர்களுக்கான ஆட்சி காணப்படுகிறது. இனிவரப் போகும் ஆட்சியும் அவ்வாறானதாகவே அமையும்.

நாட்டில் அரசியல் ரீதியான இணக்கப்பாடொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையே சர்வதேச நாணய நிதியமும் வலியுறுத்தியுள்ளது.

அரசியல் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்பதால் வலியுறுத்தப்படுவது கட்சியொன்றுக்கு பெரும்பான்மை பலத்தை வழங்க வேண்டும் என்பதல்ல.

நாடு அபிவிருத்தியடைய வேண்டுமெனில் மக்கள் மத்தியில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். அதுவே ஒருமைப்பாடாகும். ஆனால் அந்த ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் எந்த தலைவருக்கும் முடியாமல் போயுள்ளது.

இனவாத செயற்பாடுகளால் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியாமலுள்ளது. நவ சமசமஜாக் கட்சி என்ற ரீதியில் நாமே இனங்களுக்கிடையில் எடுக்கப்படும்தீர்மானத்துக்கமையவேஎம்மால்அந்த ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை வலியுறுத்தியிருக்கின்றோம். எனவே மக்கள் மீது பலவந்தமாக அதனை சுமத்த முடியாது.

அதற்காக நாம் காலம் காலமாக போராடியிருக்கின்றோம். இம்முறைத் தேர்தலில் எவருமே பாரியளவில் இனவாதத்தை பேசவில்லை. தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவே அவர்கள் இனவாதத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பது தொடர்பில் தெரியாதவர்களும் இருக்கின்றனர். அவர்களுக்கு நாம் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். – என்றார்.(05)

# அரகலய போராட்ட காணொலிகளை தவறாகப் பகிர்ந்தால் சட்டநடவடிக்கை

## பொலிஸ் எச்சரிக்கை

அரசியல் இலாபத்திற்காக தவறாக வழிநடத்தும் வன்முறைச் சம்பவங்களை தூண்டக்கூடிய குறிப்பாக கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற அரகலய போராட்டம் தொடர்பான காணொளிகளை பகிர்பவர்களுக்குஎதிராகசட்டநடவடிக்கைஎடுக்கப்படும் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகில் முன்னெடுக்கப்படும் வாகன சோதனைகள் மற்றும் 2022 ஆம் ஆண்டு மே 9 ஆம் திகதி ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த காட்சிகள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களின் காணொளிகள்சமூகஊடகங்களில்மீளப்பரப்பப்படுவது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த கால நிகழ்வுகளை கொண்ட குறித்த காணொளிகள் தற்போது நடைபெறுவதுபோன்று தவறாக சித்திரித்து பொதுமக்களை தவறாக வழிநடத்தி, சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற, பிழையான காணொளிகளை சமூக ஊடகங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை வலியுறுத்தினர்.

அத்தோடு, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் பிழையான தகவல்களை பதிவிடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# அதிபர் உட்பட 6 பேர் கைது

## புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளை படம் எடுத்து வட்ஸ்அப் ஊடாக பகிர்ந்தனராம்

அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் பரீட்சை மையத்தில் நடைபெற்ற 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாளைப் புகைப்படம் எடுத்து வட்ஸ்அப் ஊடாக பகிர்ந்த பாடசாலை அதிபரும் ஆறு ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் நகரம் மற்றும் நொச்சியாகம ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபரும் ஆறு ஆசிரியர்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் கடந்த 15 நடைபெற்ற நிலையில் குறித்த பாடசாலையின் பரீட்சை மையத்திற்குள் சென்ற பாடசாலை அதிபர் ஒருவர் பரீட்சையின் முதலாம் வினாத்தாளைப் புகைப்படம் எடுத்து வட்ஸ்அப் ஊடாக பல ஆசிரியர்களுக்குப் பகிர்ந்துள்ளார்.

இது தொடர்பில் பரீட்சை திணைக்களத்திற்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர், சந்தேக நபர்களின் கையடக்கத் தொலைபேசிகள் பரீட்சைதிணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த புகைப்படங்கள் அநுராதபுரம், நொச்சியாகம , கொழும்பு ஆகிய பல்வேறு பிரதேசங்களுக்குப் பகிரப்பட்டுள்ளதாகவும் இத்தகைய விடயங்களால் பரீட்சைகள் மீதான நம்பிக்கை இழக்கப்படுவதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பரீட்சை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (05)

# சர்வதேச அழகிப் போட்டியில் வென்ற திலினி இலங்கையை வந்தடைந்தார்



இந்தோனேசியாவில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச அழகிப் போட்டியில் கலந்து கொண்டு முதலாம் இடத்தைப் பெற்ற திலினி குமாரி திங்கட்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

கண்டி, பிரிமத்தலாவ பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர், நடிகையாகவும், அறிவிப்பாளராகவும் பல துறைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசியாவின் பாலி தீவில் சுமார் 20 நாடுகளைச் சேர்ந்த அழகுராணிகள் பங்கேற்ற இந்தப் போட்டி , கடந்த 09ஆம் திகதி முதல் திங்கட்கிழமை வரை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற திலினி, இந்தோனேசியாவின் ஜகார்த்தாவிலிருந்து ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# சகல இன மக்களின் வாக்குகளாலும் வெற்றிபெறக்கூடிய தலைவரே சஜித்

## முஜிபுர் ரஹ்மான் பெருமிதம்




ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் தோல்வியை முன்னரே தெரிந்து கொண்ட பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலரும் தற்போது அமைதியைப் பேணுகின்றனர். எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சகல இன மக்களின் வாக்குகளாலும் வெற்றி பெறக்கூடிய தலைவராக சஜித் காணப்படுகின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற மாட்டார். எனவே தான் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள்பலரும்அமைதியைப் பேணுகின்றனர். ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும்எந்தவொருஎம்.பிக்களையும் தேர்தல் பிரசார மேடைகளில் காணக்கூடியதாக இல்லை.யானைசின்னத்தில்வெற்றி பெற முடியாது என்பதற்காகவே அவர்எரிவாயுசிலிண்டர்சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

எனவே ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் எவரேனும் அவருக்கு வாக்களிப்பதற்கு தீர்மானித்திருந்தால், அந்த முடிவை மாற்றிக் கொண்டு சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்க வேண்டும். 100 இலட்சம் வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என ஐ.தே.கவின் காலி மாவட்ட தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். அவ்வாறெனில் ஏன் அவர்களுக்கு எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலுக்கான வேட்புமனுவைத் தாக்க செய்ய முடியாமல் போனது?

எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சகல இன மக்களின் வாக்குகளாலும் வெற்றி பெறக்கூடிய தலைவராக சஜித் காணப்படுகின்றார். சிறுபான்மை மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் அனைவரும் எம்முடனேயே இருக்கின்றனர்.

18ஆம் திகதி மருதானையில் இடம்பெறவுள்ள இறுதி தேர்தல் பிரசாரக் கூட்டமானது சஜித் பிரேமதாஸவின் வெற்றிக் கூட்டமாகவே அமையும். கொள்கை அரசியல்செய்வதாகக்கூறியவர்கள் இன்று வாக்குறுதி அரசியல் செய்து கொண்டிருக்கின்றனர். எனவே அவ்வாறானவர்களின் வாக்குறுதிகளுக்கு ஏமாற்றமடையாமல் சஜித் பிரேமதாஸவின் வெற்றிபயணத்தில் இணையுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். - என்றார்.

(05)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சிந்திக்கச் சிறு இடைவெளி வழங்கவேண்டும் கட்சிகள்

2024 இலங்கை அரசுத் தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகள் அனைத்தும் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றன. அடுத்துவரும் இருநாள்களும் வாக்களிப்புக்கு முன்னரான அமைதித் தினங்கள். வேட்பாளர்களின் திணிப்புக்களுக்கு உட்படாமல் ஆறஅமர இருந்து சிந்தித்து யாரை அடுத்த அரசுத் தலைவராக்கலாம் என்று அவர்கள் முடிவு எடுப்பதற்காக இந்தக் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. எப்படி இந்த நாட்களில் குறுக்கு வழியில் அல்லது கள்ளமாக மக்களை வசப்படுத்துவது என்று அலைவதை அரசியல் கட்சிகள் நிறுத்தி மக்களுக்கு ஒத்துழைக்கவேண்டும்.

புரட்டாதி 21 தேர்தல் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சூடுபிடிக்கத் தொடங்கிய தேர்தல் பரப்புரைகளால் மக்களின் காதுகள் அடைபட்டுள்ளன. வேட்பாளர்கள் அள்ளி வழங்கிய வாக்குறுதிகள், சலுகைகள், அபிவிருத்தித் திட்டங்கள் ஏராளம் ஏராளம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரதேசத்திற்கும் அவர்கள் செல்லும்போது அங்கெல்லாம் அவர்கள் செய்ய இருப்பதாகக் கூறிய திட்டங்களைக் கேட்கும்போது இலங்கையில் பாலும் தேனும் ஆறாய் ஓடும் என்கிற கற்பனையைத் தவிர்க்க முடியவில்லை.

போதாக்குறைக்கு வேட்பாளர்கள் ஒருவர் மீது ஒருவர் வசை மாரியையும் பொழிந்து தள்ளியுள்ளார்கள். நான் ஆட்சிக்கு வந்தால் நல்லதே நடக்கும் என்றும் மற்றவர் ஆட்சிக்கு வந்தால் கெட்டது மட்டுமே நடக்கும் என்றும் மிரட்டி வைத்துள்ளார்கள். மீண்டும் வரிசை யுகம் வரும், சமையல் வாயு தட்டுப்பாடு வரும், வாகன எரிபொருளுக்குத் தட்டுப்பாடு வரும், பொருள்கள் விலை உயரும் என்றெல்லாம் மிரட்டியிருக்கிறார்கள். குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கும் உங்களை இப்போதுதான் குணப்படுத்திவருகின்றேன் வைத்தியரை மாற்றினீர்கள் என்றால் இறந்தே போவீர்கள் என்று வாக்காளர்களை மிரட்டி வைத்திருக்கிறார்கள். ஒரு வேட்பாளரைத் தோற்கடிக்க மற்ற இருவர் சேர்ந்து சதி செய்கிறார்கள் என்று எல்லோருமே கூறியிருக்கிறார்கள். தமிழ் வேட்பாளருக்கு வாக்களிக்காவிட்டால் நீங்கள் எல்லாம் தமிழர்களே இல்லை என்றிருக்கிறார்கள். தமிழ் வேட்பாளருக்கு வாக்களித்தால் உங்களுக்கு எதிர்காலமே இல்லை என்றும் பயங்காட்டி இருக்கிறார்கள்.

இப்படி இவர்கள் அள்ளிக் கொட்டியுள்ள அரசியல் சகதிக்குள் இருந்து நல்லவற்றைப் பொறுக்கி, தேவையானவற்றைத் தொகுத்து ஒரு தெளிவான முடிவுக்குவருவதற்கு வாக்காளர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த இரு நாள் காலக்கெடு அவசியமாக இருக்கின்றது. அதற்கு மதிப்பளித்து இந்த இரு நாட்களும் அரசியல் கருத்துத் திணிப்புக்கள் இன்றி மக்களை நிம்மதியாகச் சிந்திக்க அரசியலாளர்கள் அனுமதிக்கவேண்டும். கடைசி நேரத்திலும் மக்களை மூளைச் சலவை செய்து தம்பக்கம் இழுத்துக்கொள்ளவேண்டும் என்று பறக்கக்கூடாது. அதற்காகத் தவறான வழிகளைப் பயன்படுத்தக்கூடாது.

நீங்கள் கொட்டவேண்டிய குப்பைகளை எல்லாம் இன்று நள்ளிரவுக்குள் கொட்டிவிடுவீர்கள் என்பது உங்களுக்கே தெரியும். அதன் பின்னர் மக்களை நிம்மதியாகச் சிந்திக்க அனுமதியுங்கள். சமூக ஊடகங்கள் மூலமாகவும் வேறு வழிகளிலும் முதன்மை ஊடகங்களில் பூடகமான வழிமுறைகள் ஊடாகவும் உங்கள் ஆதரவுக்கருத்துக்களைத் தொடர்ந்தும் திணிக்க முற்படாதீர்கள். குறைந்தபட்ச நேர்மையோடாவது நடந்துகொள்ளுங்கள். மக்களுக்குச் சிறிதாவது இடைவெளி கொடுங்கள், அவர்கள் தங்கள் வாக்குகளை அளிப்பதற்கு முன்பாக.

# 76 வருட கால வரலாற்றில் ஒரு தீர்க்கமான தருணம்...!

**சயனிகா**

2024 இலங்கை ஜனாதிபதித் தேர்தலை



நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பானது நாட்டின் அரசமைப்பிலும் ஜனாதிபதி தேர்தல் சட்டத்திலும் வேரூன்றியுள்ளது. அந்த வகையில் தேர்தலுக்கான தகுதிஎன்பதுஒருநபருக்குஎவ்வாறுஇருக்கவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். ஒரு வேட்பாளர் இலங்கை குடிமகனாக இருக்கவேண்டும், அவர்கள் வேறு எந்த நாட்டிலும் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கக்கூடாது, போன்ற தகுதிகளினை கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் வாக்களிக்க உரித்துடையவர்கள் இலங்கை பிரஜையாக 18 வயதினை தாண்டியவராக இருக்க வேண்டியது அவசியமாகும். இவ்விரண்டு விடயங்களும் ஒரு வேட்பாளரும் வாக்களிப்பவரும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுவதாகும்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலானது மிகுந்த சவால்மிக்க தேர்தல் ஆகவும் விருப்பு வாக்கின் மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலாகவும் அமைய அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே அனைவரும் விருப்பு வாக்குகளை வெவ்வேறுபட்ட மூன்று பேருக்கு அளிக்க முடியும்.

**வாக்களிப்பு முறை 1**

ஒருவர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்துக்கு அருகில் உள்ள பட்டியில் × என அடையாளம் விடலாம் அல்லது 1 என இலக்கமிடலாம். × என அடையாளம் இட்டால் ஏனைய விருப்பு வாக்குகளை செலுத்த முடியாது. அவ்வாறு செலுத்தினால் அது செல்லுபடி அற்றவாக்காக கருதப்படும்.

**வாக்களிப்பு முறை 2 -**

ஒருவர்தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்திற்கு அருகில் உள்ள பெட்டியில் 1 எனவும் இன்னும் ஒருவருக்கு 2 எனவும் இலக்கமிட்டு இரண்டு வாக்குகளை அளிக்க முடியும்.

**வாக்களிப்பு முறை 3 -**

ஒருவர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்திற்கு அருகில் உள்ள பெட்டியில் 1 எனவும் இன்னொருவருக்கு 2 எனவும் இன்னும் ஒருவருக்கு 3 எனவும் இலக்கமிட்டு மூன்று வாக்குகளை அளிக்க முடியும்.

இவற்றைத் தவிர வேறு ஏதாவது ஒரு வகையில் அளிக்கப்படுகின்ற வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாகக் கருதப்படும்.

தேர்தலில் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் தவிர்த்து செல்லுபடியான வாக்குகளில் ஒரு வேட்பாளர் வெற்றிபெறவேண்டும் என்றால் 50% வாக்குகளைப் பெறவேண்டும். ஒருவேளை எந்த ஒரு வேட்பாளரும் 50 வீதமான வாக்குகள் இணை பெற்றிருக்காவிடின் என்ன நடக்கும் என்பதே இன்று பலரின் கேள்வியாக இருக்கின்றது. இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழு இரண்டாவது வாக்கு எண்ணும் முறைக்கு செல்லும்.

அதாவது எவரும் 50 விதமான வாக்கு பெறாத நிலையில் முதலாவது அதிகூடிய வாக்குகளை பெற்றவர்கள் இணையும் இரண்டாவது அதிகூடிய வாக்குகளை பெற்றவர்கள் இணையும் தேர்ந்தெடுப்பார்கள் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களின் வாக்களிப்பு அட்டையை எடுத்து அங்கு அளித்திருக்கும் விருப்ப வாக்குகளின் எண்ணிக்கையை சேர்த்து எடுத்து இரண்டு கட்சிக்கும் வழங்குவார்கள். அதன்பின் முன்பிருந்த வாக்குகளின் எண்ணிக்கையும் மற்றும் குறித்த கட்சிக்கு கிடைத்த விருப்பு வாக்குகளின் அடிப்படையிலும் ஜனாதிபதி தேர்ந்தெடுத்து அறிவிக்கப்படுவார்.

அந்தவகையில் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான பிரகடனத்தை வெளியிடும் திகதி, பெயர் குறித்த நியமங்களை ஏற்கும் திகதி என்பவற்றை ஜூலை மாதம் 26ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு தெரிவித்து இருந்தது.

இதன் அடிப்படையில் இலங்கை நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலுக்கான வாக்களிப்பு எதிர்வரும் 21.9.2024 அன்று இடம்பெற உள்ளது. அந்த வகையில் ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலம் 14.8. 2024 அன்று நிறைவடைந்திருக்கும் தருவாயில் தேர்தலுக்கு போட்டியிடுவதற்காக 40 பேர் கட்டுப்பணத்தினை (அரசியல் கட்சி 50000.00 , சுயேட்சை 75000.00) செலுத்தியிருந்தனர். அத்துடன் வேட்புமனுத்தாக்குதல் 15.8 . 2024 அன்று காலை இடம்பெற்றதுடன் இதில் கட்டுப்பணம் செலுத்திய 40 பேரில் 39 பேர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸ்ஸநாயக்க, நாமல் ராஜபக்ச, சரத் பொன்சேகா, விஜயதாச ராஜபக்ச, அரியநேத்திரன் உள்ளிட்ட 39 பேர் போட்டியிட உள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பதிவு செய்யும் அனைத்து பெரும் போக்கு ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கருத்துக்களை பதிவு செய்யும் அரசியல் விமர்சகர்கள் அனைவரும் பொதுவாக பயன்படுத்தும் ஒரு சொல் 'தீரணாத்மக' என்பது இது தமிழில் அதனை 'இரண்டில் ஒன்று முடிவாகப் போகும் தருணம்' என்று சொல்லலாம்.

முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இந்தத் தேர்தல் முற்றிலும் வேறுபட்ட ஓர் இயல்பைக் கொண்டு இருப்பதனை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதித் தேர்தல்களில் இதுவரையில் இருந்து வந்த இருமுனைப் போட்டியில் இந்த தடவை ஒரு நான்கு முனைப் போட்டியாக மாற்றமடைந்திருப்பது முதல் விடயமாகும். தேர்தல்களில் இதுவரையில் ஐந்து வீதத்திற்கு குறைவான வாக்குகளை மட்டுமே பெற்று வந்த ஒரு விளிம்பு நிலைக்கட்சி ஒரு முதன்மை போட்டியாளராக எழுச்சியடைந்திருப்பது இரண்டாவது சிறப்பு விடயமாகும்.

1990 தொடக்கம் ஜனாதிபதி தேர்தலில் எதிரெதிராக இனவாதமாக பார்க்கப்பட்ட தமிழ் சிங்கள சமூகத்தினரின் பிரிவினைவாதம் தீவிரவாதம் இன்று பரப்புரை மேடைகளில் இருந்து தலைமறைவாகி இருக்கின்றது மற்றுமோர் முக்கிய விடயமாகும். அதாவது கடந்த 20 ஆண்டுகளில் வெளிப்படையாக இனவாதம் பேசப்படாமல் நடாத்தப்படும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

சிங்கள மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் தெளிவாகவே ஒரு ஜேவிபி / தேசிய மக்கள் சக்தி ஆதரவு அலை நிலவி வருவதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஒவ்வொரு தரப்புகளால் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகள் மீண்டும் மீண்டும் இதனை உறுதி செய்கின்றன. அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அணி மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் அரசியல் ஆய்வாளர்களும்கூட ' ஆம் அவர்களுக்கு ஒரு

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க நாட்டில் உறுதிப்பாடு அவசியம்

## நெரஞ்சன் டி சில்வா தேவா ஆதித்ய தெரிவிப்பு

ஒரு நாடு நேரடி வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு, முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் பணம் பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில், அந்நாட்டில் ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தி, நம்பிக்கையைக்கட்டியெழுப்பவேண்டும்என்றுஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் நெரஞ்சன் டி சில்வா தேவா ஆதித்ய தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 94 சட்டங்கள் இலங்கையை வளமான மற்றும் போட்டிமிக்க பொருளாதாரம் கொண்ட நாடாக மாற்ற வழிவகுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சரிந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்த சரியான மற்றும் துணிச்சலான தீர்மானங்களினால் இலங்கை இதுவரை பல சாதனைகளைப் புரிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு, பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் நெரஞ்சன் டி சில்வா தேவா ஆதித்ய இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னணி அரசியல்வாதியாக விளங்கிய நெரஞ்சன் டி சில்வா தேவா ஆதித்யா, பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முதலாவது இலங்கை கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினரும், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் அபிவிருத்திக்கான முன்னாள் துணைத் தலைவருமாவார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் நெரஞ்சன் டி சில்வா தேவா ஆதித்ய மேலும் கூறியதாவது -

'ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து வேலைத் திட்டத்தை ஆரம்பித்து, நாட்டின் நிதித்துறையை பலப்படுத்தவும் துணிச்சலுடன் செயற்பட்டார். அதில் அவர் பெரிய சாதனைகளை படைத்துள்ளார்.

பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அப்பால் சென்று, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், ஜனாதிபதி 94 சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார்.

நான் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இருந்தபோது, ஐந்து ஆண்டுகளில் சுமார் 80 சட்டமூலங்களை நிறைவேற்ற முடிந்தது. அந்தச் சூழலில் இது ஒரு சாதனை என்றே கூறவேண்டும்.

நல்லாட்சி, டிஜிட்டல் நவீனமயமாக்கல், ஊழல் எதிர்ப்பு, நிதி மேலாண்மை மற்றும் அரச கடன் மேலாண்மை போன்ற முக்கியமான பகுதிகளை உள்ளடக்கிய புதிய சட்டங்களை ஜனாதிபதி உருவாக்கினார்.

அதேபோன்று, முறையற்ற விதத்தில் பெறப்பட்ட சொத்துக்களை மீட்பது, தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்துதல், பெண்களை வலுவூட்டல் மற்றும் பொதுப் பயன்பாடுகள், வங்கி, விமான சேவைகள் மற்றும் மீன்வளம் உள்ளிட்ட துறைகளை மறுசீரமைக்க புதிய சட்டங்களை ஜனாதிபதி அறிமுகப்படுத்தினார். இந்தத் துறைகளில் வியட்நாம், கம்போடியா, இந்தியா போன்ற நாடுகளை விட பின்தங்கியுள்ள இலங்கைக்கு மிகவும் அவசியமான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கக் கூடியவாறு சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் பொருளாதார பரிமாற்றச் சட்டம் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

ஒரு நாட்டிற்கு வரும் வெளி நாட்டு முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு இருக்கவேண்டும் என்பதே அதற்கான காரணமாகும். அவர்களுக்கு நீண்ட காலத்திற்கு திட்டமிடக்கூடியவாறு இருக்க வேண்டும். அவர்கள் செய்யும் முதலீடுகளுக்கு நாட்டில் பாதுகாப்பு இருப்பதை உணர வேண்டும்.

2050ஆம் ஆண்டளவில் பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை அடைவது ஒரு இலக்காகும். 2027ஆம் ஆண்டளவில் வருடாந்த பொருளாதார வளர்ச்சியை 5மூ ஆக அதிகரிக்க வேண்டும். இந்த இலக்குகளுடன் இலங்கையின் நீண்ட கால அபிவிருத்திக்கான அடித்தளத்தை இடுவதற்கு பொருளாதார மாற்றச் சட்டம் வழிவகுக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத் திட்டம் இலங்கையில் முதலீட்டு சூழலை மேம்படுத்தி, நிலையான வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதாகும். இதன்மூலம், நாட்டின் பிரதான தொழில்களான விவசாயம் ஆகியவற்றை நவீனமயப்படுத்துவதன் மூலம் உலகப் பொருளாதாரத்தில் இலங்கைக்கு போட்டிமிகு எதிர்காலத்தை உருவாக்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதில் எனக்கு 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது. வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பது இலகுவான பணியல்ல. குறிப்பாக அதிக போட்டி நிறைந்த உலக சந்தையில். வெளிநாட்டு முதலீடு வெற்றிகரமாக இருக்க, முதலீட்டாளர்களுக்கு ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு மற்றும் நம்பிக்கையை உருவாக்க வேண்டும், இதனால் அவர்கள் முதலீடு செய்யும் பணம் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய முடியும். ஒரு நாடாக நாம் சரியான நிலைமைகளை முன்வைக்க வேண்டும்.

முதலீட்டாளர்கள் குறிப்பாக வருமானத்தை மட்டுமல்ல, ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மையையும் எதிர்பார்க்கிறார்கள். உங்கள் பணத்தை நிலையற்ற வங்கியில் வைக்க விருப்பமாட்டீர்கள். இதுபோல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நீண்ட கால பாதுகாப்பு கொண்ட நாடுகளை மட்டுமே தெரிவு செய்கிறார்கள்.

இலங்கைக்கு அதிகளவான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், துறைமுக நகரங்கள் தொடர்பான அண்மையில் நிறைவேற்றப்பட்ட வங்கி மற்றும் நிதி ஒழுங்குமுறைகளும் முக்கியமானதாகும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கையை வளமான மற்றும் போட்டிமிக்க பொருளாதாரம் கொண்ட நாடாக மாற்றுவதற்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார். அவரது தொலைநோக்குப் பார்வையும் தலைமைத்துவமும் இலங்கையை உலகில் சிறந்த நாடாக மாற்றும் என நான் நம்புகிறேன்' என்றார். (05)

# 76 வருட கால வரலாற்றில்...

4ம் பக்க தொடர்ச்சி..........

ஆதரவு அலை இருந்து வருகிறது அதனை மறுக்க முடியாது ' என்ற பீடிகையுடனே தமது கருத்துக்களை முன் வைக்கிறார்கள். அதே வேளையில் மக்கள் பரப்புரைகளின் வாக்குறுதிக்காகக் காத்திருக்கும் அதே நேரம் சஜித் மற்றும் ரணில் ஆகியோர் இந்தத் தடவை முன் வைத்திருக்கும் பரப்புரை முழக்கங்கள் பெரிதாக வாக்காளர்களைக் கவர்வதாக இருக்கவில்லை.

அந்த வகையில் தேர்தல் கருத்துக்கணிப்பின் அடிப்படையில் வாக்களிக்கும் மக்கள் பல்வேறு பிரிவிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

1.வாக்குரிமை இருந்தும் வாக்களிக்க விரும்பாதவர்கள்.
2. அரசியல் தலைவர்கள் மேல் ஆர்வம் கொண்டவர்கள்.
3.தேர்தல் குறித்து ஆர்வம் இல்லாதவர்கள்.
4. சுயமாக முடிவுகளை எடுத்து தமது உரிமையை நிலை நாட்டுபவர்கள்.
5. உந்துதலின் பெயரில் செயல்படுபவர்கள்
6. தேர்தல் பரப்புரைகளுக்காகக் காத்திருப்பவர்கள்.

பொதுவில் மக்களது கருத்தானது, குறித்த அரசியல் கட்சிகள் தாம் வீழ்த்த விரும்பும் முதன்மை எதிரி யார் என்பது அவர்களுக்கே தெளிவில்லாமல் இருப்பதையும், இலங்கையின் பொருளாதார யதார்த்தங்களுக்கு துளியும் சம்பந்தமில்லாத வாதத்தில் கோமாளித்தனமான வாக்குறுதிகளை வழங்குவதையும் சுட்டிக்காட்டுகின்றன.

அது மட்டுமின்றி 'ஒரு தடவை அவர்களுக்கும் கொடுத்துப் பார்ப்போம்' என்பது அதாவது' இவ்வளவு காலமும் எத்தனையோ பேருக்கு வாக்களித்து ஏமாந்திருக்கின்றோம், கடைசியில் இன்றைய வங்கிரோத்து நிலைதான் எமக்கு எஞ்சி இருக்கின்றது ', என்ற ஆதங்கமே இந்த பேச்சுக்களின் தொனிக்கின்றது.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட 76 வருட கால வரலாற்றில் மிக நிர்ணயமான ஒரு கட்டத்தில் வந்து நிற்கின்றது.



# கொழும்பில் வெவ்வேறு இடங்களில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் 3 பேர் கைது

கொழும்பில் வெளவேறு பகுதிகளில் ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் ஷதிங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவகம்புர பகுதியில் 17 கிராம் 890 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு – 14 பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மோதரை தொடர்மாடி குடியிருப்பு பகுதியிலிருந்து 10 கிராம் 670 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் கொழும்பு – 15 பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் ஆவார்.

இதேவேளை, தெமட்டகொடை பகுதியிலிருந்து 11 கிராம் 211 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களை மீறும் ஊடகங்களுக்கு தேர்தல் முடிவுகளை வழங்கமாட்டோம்

## தேர்தல் ஆணைக்குழு கடும்போக்கு




ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை மீறும் ஊடக நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை வழங்க மாட்டோம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களை மீறும் அல்லதுகடைப்பிடிக்காதஊடக நிறுவனங்களுக்கு எதிராகத் தேர்தல் ஆணைக்குழுவால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தாலும் அத்தகைய ஊடகங்களிடமிருந்து விலகி இருக்க முடியும்.

மின்னஞ்சல், வாட்ஸ்அப் போன்ற ஊடகங்கள் ஊடாக அனைத்து ஊடக நிறுவனங்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ முடிவுகள் பகிரப்பட்டு வருகின்றன.

ஊடக நிறுவனங்களுக்கான தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்கள் கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# இலங்கையர்கள் மூன்று பேர் இந்தியாவில் படகுடன் கைது

இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த ஒரு பைப்பர் படகையும் அதிலிருந்த மூன்று இலங்கை மீனவர்களை இந்திய கடலோர காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

கஞ்சா போதை பொருள் அடங்கிய மூடைகளை சட்டவிரோதமாக தமிழகத்தைச் சேர்ந்த கடத்தல்காரர்களிடம் இருந்து வாங்கி செல்ல காத்திருந்த போது நடுக்கடலில் படகு பழுதாகி நின்றதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

நடுக்கடலில் மீனவர்களிடம் நடத்திய முதல் கட்ட விசாரணையில் காற்றின் வேகம் காரணமாக திசை மாறி இந்திய கடல் பரப்புக்குள் வந்ததாக தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்திய கடலோர காவல்படை மண்டபம் முகாமில் வைத்து மீனவர்களிடம் முழுமையான விசாரணைக்கு பின்னர் மீனவர்கள் சட்ட விரோத நடவடிக்கை ஈடுபடுவதற்காக இந்திய கடல் பகுதியில் வந்தார்களா அல்லது எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்பது தெரியவரும் என இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தொண்டி அடுத்த மணல்மேல்குடியை சேர்ந்த மர்ம நபர்களிடம் இருந்து கஞ்சா மூடைகள் வாங்கி செல்லவதற்காக தொண்டியில் இருந்து சுமார் 15 நாட்டிக்கல் தூரம் நடுக்கடலில் காத்திருந்த போது திடீரென படகு எஞ்சினில் கோளாறு ஏற்பட்டதால் படகுடன் இந்திய கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த போது இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான ரோந்து கப்பலில் இருந்த வீரர்கள் பிடித்துள்ளனர்.

இலங்கையர்கள் மூவரும் கரைக்கு வந்த அவர்களுடைய செல்போன்களை பறிமுதல் செய்து அதன் அடிப்படையில் தமிழகத்தைச் சேர்ந்த கடத்தல்காரர்கள் யார் இவர்களுக்கு கஞ்சா சப்ளை செய்ய இருந்தார்கள் என்பது குறித்து முழுமையாக விசாரிக்கப்படும், தற்போது கைது செய்யப்பட்டவர்களிடம் கஞ்சா மூடைகள் கைப்பற்றப்படவில்லை, எனவும் விசாரணைக்கு பின்னர் இவர்கள் மூவரும் மண்டபம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றம் ஊடாக புழல் சிறையில் அடைக்கப்படுவார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளது.(05)

# வாக்கு மோசடிகளில் ஈடுபட்டால் அபராதம்

## தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

வாக்கு மோசடியில் ஈடுபடுவோருக்கு 2 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு மேலும் குறிப்பிடுகையில் –

வாக்கு மோசடியில் ஈடுபடுவோருக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த தொகை 2 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படும் நபர்களுக்கு ஓராண்டுக்கு குறையாத காலம் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் உரிய சட்டங்களை கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி எப்போதும் தேர்தலுக்காகவன்றி நாட்டு மக்களுக்காகவே செயற்பட்டுள்ளார்

## கோகிலா குணவர்தன கூறுகிறார்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எப்போதும் தேர்தலை இலக்காகக் கொள்ளாமல் நாட்டு மக்களுக்காகவே செயற்பட்டார் என்றும், நாட்டை சிறந்த நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்றால் அரசியல் தீர்மானங்களை எடுக்கக் கூடாது என அவர் உறுதியாக நம்பியதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன தெரிவித்தார்.

திசைகாட்டி அரசாங்கத்தின் கீழ் 'பிளேன்டி' குடிக்குமாறும்,துன்பங்களைத்தாங்கிக்கொள்ளுமாறும் விஜித ஹேரத் எச்சரிப்பதாகவும், திசைகாட்டி வெற்றி பெற்றால், 2022 இல் நாடு இருந்த நிலைக்கு மீண்டும் திரும்ப நேரிடும் என்பது தெளிவாகத் தெரிகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பு, பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

இன்று பொருளாதார ரீதியாக ஸ்திரமாகிவிட்ட நாட்டை திசைகாட்டிக்கு வாக்களித்து பின்னோக்கித் திருப்பவேண்டாம்என்று மக்களைக்கேட்டுக்கொண்ட அவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டுமாயின் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி அவருக்கு தெளிவான வெற்றியை வழங்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும்உரையாற்றியநாடாளுமன்றஉறுப்பினர் கோகிலா குணவர்தன –

'ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை இந்த நிலைக்கு மிக இலகுவாக கொண்டு வரவில்லை. அதற்காகசிலசமயங்களில்கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவை அனைத்தையும் நாட்டு மக்களின் நலனுக்காகவே செய்தார். அதன் பலனை இன்று அனுபவித்து வருகிறோம். அடுத்த ஐந்து வருடங்களில் இந்த வேலைத்திட்டம்இந்தநாட்டில்நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய தலைவர்ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கஎன்றுமக்கள் நம்புகின்றனர். 2022ஆம் ஆண்டு பொருளாதார வீழ்ச்சி நிலைக்கு தள்ளப்பட்ட நாட்டை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கட்டியெழுப்பினார். இந்த உண்மை மக்களுக்கு நினைவு இருக்கின்றது.

2022ஆம்ஆண்டுஜனாதிபதிரணில்விக்ரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்ற போது இந்த நாட்டின் நிலைமையை நினைவுநினைத்துப்பாருங்கள். ஒரு முட்டை நூறு ரூபாவுக்கு வாங்கியது ஞாபகம் வரும். சில சந்தர்ப்பங்களில் ஓர் இறாத்தல் பாண் வாங்கக் கூட கிடைக்கவில்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த். இந்த நிலையில் தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்றார்.

அத்துடன், எதிர்காலத்தில் நம்பிக்கையில்லாத, வட்டி வீதம் பாரியளவில் உயர்ந்து வரிசையில் இருந்த நாட்டையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றார். ஆனால் இந்த இரண்டு வருடங்களில் கடுமையானமுடிவுகளை எடுத்து, அவற்றால்மக்கள் பாதிக்கப்படும் போது அவர்களுக்குநிவாரணம் அளித்து நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார்.

மக்களின் ஏழ்மை 25மூ அதிகரித்த போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சமுர்த்திக்குப் பதிலாக அந்த பணத்தை மூன்று மடங்காக அதிகரித்து 'அஸ்வெசும' வழங்கினார்.

அந்த முடிவுகளில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று நம்பினார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எப்போதும் தேர்தல்களுக்காக அன்றி, நாட்டு மக்களுக்காகவே செயற்பட்டார். எதிர்வரும் காலத்தில் நாட்டை நல்லதொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு அரசியல் தீர்மானங்களைக் எடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அவரது தோழர்கள் பற்றிய கதைகளை கேட்டவுடன், நாட்டை திசைகாட்டியிடம் ஒப்படைக்க முடியுமா என்ற கேள்வி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. 'பிலேன்டி குடிகுமாறும், பெல்ட்களை இறுக்கிக் கொள்ளத் தயாராகுமாறும் அவர்களே எச்சரிக்கின்றனர். எனவே திசைகாட்டிக்கு வாக்களித்து 2022 இல் இருந்த இடத்திற்கு, இந்த நாடு செல்ல வேண்டுமா? என்று நான் கேள்வி எழுப்புகிறேன்.

நாம் 'பிளேட்டி' குடித்துக்கொண்டிருந்த நேரத்தில்தான் ஜனாதிபதி பாலுடன் தேநீர் குடிக்கும் நிலைக்கு இந்த நாட்டைக் கொண்டுவந்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது. சரியான தலைமையின் கீழ் முறையான நிதி நிர்வாகம் இல்லையென்றால், இன்று பங்களாதேஷுக்கு நேர்ந்த நிலை நம் நாட்டிற்கும் நிச்சயம் நடக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, ஒரு பெண்ணாகவும், தாயாகவும், உங்கள் குழந்தையைப் பற்றியும் இந்த நாட்டைப் பற்றியும் சிந்தித்து இந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவிற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் எதிர்காலமும் உங்களின் பெறுமதியான வாக்குகளிலேயே தங்கியுள்ளது என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

சஜித் பிரேமதாச என்பவர் ஐ.தே.க. இருந்து பிரிந்த சென்றவர். இந்த நேரத்தில் நாட்டைப் பற்றியும், நாட்டின் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும்சிந்தித்துஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வெற்றிபெறச் செய்யும் வகையில் சிலிண்டரின் முன்பாகவாக்களிக்குமாறு உண்மையான ஐக்கிய தேசியக் கட்சியினரை கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.(05)



# யாழ். மத்திய கல்லூரியில் முன்னாயத்த கள ஆய்வு

## வாக்கெண்ணும் பணிகள் தொடர்பில்



எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்மேற்கொள்ளப்பட்டுவரும் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவாத்தாட்சி அலுவலருமானமருதலிங்கம்பிரதீபன் தலைமையில் ஆய்வு செய்யப்பட்டது.

இந்தக் கள ஆய்வில் மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் ஆய்வுசெய்யப்பட்டதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கள ஆய்வில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. ஜே. ஹாலிங்க ஜெயசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் பங்குபற்றினார்கள்.(05)

# தேர்தலின் பின்பான வன்முறை பற்றி தகவல்கள் உறுதிப்படுத்தப்படாதவை

## பொதுமக்கள் பதற்றமடையக்கூடாது என பவ்ரல் வேண்டுகோள்

ஜனாதிபதிதேர்தலிற்குபின்னரான வன்முறைகள் குறித்த பதற்றமடைவதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்கள் அமைதியாகயிருக்கவேண்டும் தேர்தல் வாக்களிப்பிற்கு பின்னரான வன்முறைகள் குறித்த பதற்றத்திற்கு பலியாக கூடாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகஹன ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் வன்முறைகள் இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து எங்களிற்கு எந்த தகவலும் கிடைக்கிவில்லை என தெரிவித்துள்ள அவர், வன்முறைகள் அமைதியின்மை குறித்த பல தகவல்கள் உறுதிப்படுத்தப்படாதவை,அதனை எச்சரிக்கையுடன் கையாளவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் சமூக அமைதியை பேணவேண்டியதன்அவசியத்தைவலியுறுத்தியுள்ள அவர் ஐக்கியத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில்ஈடுபடுமாறுமதத்தலைவர்கள்சிவில் சமூக பிரதிநிதிகள் அரசியல் செயற்பாட்டாளர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

நாங்கள் அனைவரையும் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டு அமைதியான சூழலிற்கு பங்களிப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்,அனைத்து பிரஜைகளும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வது தேர்தல் வேட்பாளர்களின் கௌரவத்திற்கும்,தேர்தல் நடைமுறைக்கும் அவசியமான விடயம் என ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

18ஆம்திகதிக்குபின்னர்அனைத்துபிரசாரங்களும் நிறுத்தப்படவேண்டும்,18 ஆம் திகதிக்கு பின்னர் சமூக ஊடக பிரசார நடவடிக்கைகளை நிறுத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம், வெளிநாடுகளில் இருந்து இயக்கப்படும் சமூக ஊடக பக்கங்களிற்கும் இது பொருந்தும், மீறல்களில் ஈடுபடுபவர்கள் சட்டநடவடிக்கைகளை எதிர்கொள்வேண்டிவரும் என அவர் தெரிவித்துள்ளார்.(05)

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று தொழிற்சங்க நடவடிக்கை

நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளை இலக்கு வைத்து இன்று (புதன்கிழமை) தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி, இன்று காலை 8.00 மணி முதல் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பிக்கவுள்ளதாகவும், இதனால் வைத்திய சிகிச்சை அளிப்பதில் இடையூறு ஏற்படலாம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் கலாநிதி சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊவா மாகாண இணைப்பாளரும், உதவி செயலாளர்வைத்தியர்பாலிதராஜபக்ஷவுக்கு எதிராக சுகாதார அமைச்சு முன்னெடுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பணிபகிஷ்கரிப்பை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மீள் பரீசிலனை செய்வதற்கு சுகாதார அமைச்சுக்கு 14 நாள் கால அவகாசத்தை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வழங்கும்.

அதற்குசாதாகமானபதில்கிடைக்காவிடின் மாத இறுதியில் நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.(05)

# வெல்லவாயவில் மரம் முறிந்து வீழ்ந்ததில் பெண் உயிரிழப்பு

வெல்லவாய – ஊவா குடா ஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தோரஆர வாவி அருகில் விறகு வெட்டுவதற்காக சென்ற பெண்மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தோரஆர – எதிலிவெள பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வெல்லவாய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன்,ஊவாகுடாஓயா பொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

(05)

## போட்டியிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலதா மாளிகை இருந்தால் மாத்திரமே பௌத்த சாசனத்தை பாதுகாக்க முடியும். தலதா மாளிகையின் இருப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு எம்மால் கைகளை கட்டிக் கொண்டு இருக்க முடியாது.

ஒரு சில ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கை பிரகடனம் பௌத்த சாசனத்துக்கு எதிராக உள்ளது. தேசிய கொடியையும், பௌத்த கொடியையும் மாற்றியமைப்பதாக குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான நிலை ஏற்பட்டால் பௌத்த சாசனம் இல்லாதொழியும்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. நாட்டு மக்கள் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாட்டுக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். உண்மையில் சேவையாற்றியிருந்தால் அவர் தனது மகனான நாமல் ராஜபக்சவுக்கு அறிவுரை வழங்கவேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச போட்டியில் இருந்து விலகி ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாமல் ராஜபக்சவுக்கு இன்னும் காலம் உள்ளது. எதிர்காலத்தில் அவர் போட்டியிடுவதாக இருந்தால் நிச்சயம் ஆதரவு வழங்குவோம். இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் பொருளாதாரக் காரணிகளை முன்னிலைப்படுத்தியதாக உள்ளது ஆகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி மீண்டும் தோற்றம் பெறவேண்டும்.

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச எடுத்த தீர்மானத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவு வழங்கினோம். ஆகவே அந்தத் தீர்மானத்தை தொடர்ந்து செயற்படுத்துமாறு கேட்கிறோம் என்றார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மக்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தெளிவாக இருக்கின்றார்கள். தேர்தல் தொடர்பில் நீண்ட கால அனுபவங்கள் அந்த மக்களுக்கு இருக்கின்றது. சரியான திசை வழி நோக்கி அந்த மக்கள் அணி திரள்வார்கள் என நான் நினைக்கின்றேன். ஏனெனில் வடக்கு கிழக்கில் உள்ள ஒவ்வொரு கட்சிகளுக்கும் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் இருக்கலாம். அந்த கொள்கைகள், வேலைத்திட்டங்களில் சுயலாபங்கள்தான் கலந்து இருக்கின்றன.

இது தவிர தேர்தல் புறக்கணிப்பு, தமிழ் வேட்பாளர் விடயத்திலும் எம்மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். அதனை செப்டெம்பர் 22 அறிந்து கொள்ளலாம். இருந்தாலும் எனது ஜனாதிபதி வேட்பாளர் அம்மான் ரணில் விக்ரமசிங்கதான் எனது தெரிவும் விருப்பமும் கூட.

அத்துடன் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகள் தேர்தல் விடயத்தில் தாங்களும் குழம்பி மக்களையும் குழப்புவதுதான் அவர்களின் பொதுவான இயல்பு. எனவே அதனால்தான் மக்கள் தற்போது நிதானமாகச் செயற்பட்டு வருகின்றார்கள் என்றார்.

## ஹக்கீம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண ஆளுநர் நசீர் அஹமட் மட்டக்களப்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் மிக தெளிவாக உள்ளனர் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாவும் எனது பார்வையில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என பிரச்சார பணிகளை முன்னெடுத்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. கிழக்கு மாகாணத்தில் அனைத்து மக்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் உள்ளனர். அம்பாறை மாவட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ராஜேஷ்வரனும் ஜனாதிபதிக்கு ஆதரவான பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

வடக்கிலும் அடைக்கலநாதனும் ஜனாதிபதிக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகின்றார். அறிக்கைகளுக்கு அப்பால் சுமந்திரனை தவிர அவர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக செயல்பட்டு வருகின்றனர். ரவூப் ஹக்கீம் சுமந்திரன் போன்ற ஒரு நபர் தான். ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், சுமந்திரன் இவர்கள் எல்லாம் ஒரு ஏஜென்ட். இவர்கள்தான் தமிழ் சமூகத்தை சீரழித்து வருபவர்கள். இவர்கள் மூவரும் சிறுபான்மை சமூகத்தினால் துரத்தி அடிக்கப்பட வேண்டியவர்கள்.

எமது பகுதியிலுள்ள வளங்கள் பற்றி ஜனாதிபதிக்கு நன்கு தெரியும் ஆனால் சஜித் அனுரவிக்கு நமது பகுதிகளைப் பற்றி கொஞ்சம் கூட அறிவே கிடையாது எதிர் அணி வேட்பாளர்கள் நாட்டில் ஒரு நிதி அமைச்சராக கூட உரிய பதவிகளை வகிக்காதவர்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச அனுபவம் இல்லாமல் இந்த நாட்டை எவ்வாறு குட்டி சுவராக்கியவர் என்று எங்களுக்கு நன்கு தெரியும்.

தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். சுமந்திரனை தவிர சுமந்திரனும் ஹக்கீமும் இயலும் என்றால் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நின்று வென்று காட்டட்டும். நான் இதை சவால் விடுக்கிறேன். இவர்கள் கட்சிகளை வைத்து வியாபாரம் செய்பவர்கள். இவர்களை துரத்தி அடித்தால் தான் தமிழ் முஸ்லிம் உறவுகள் கூட வலுப்பெறும் என்றார்.

## தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரிவுரையாளர்கள் 15 பேர் இணைந்து தமிழ் மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். 2024 ஜனாதிபதித் தேர்தலும் சிறுபான்மை மக்களும் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செப்டெம்பர் 21 இலங்கை தனது ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்கான தேர்தலிலே வாக்களிக்கவுள்ளது. 2022 நாட்டிலே ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் அதனையொட்டி எழுச்சி பெற்ற மக்கள் போராட்டங்கள் என்பவற்றின் பின்னர் நாடு சந்திக்கும் முதலாவது மிகவும் முக்கியமான தேர்தல் இதுவாகும்.

கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிப்போய் இருக்கும் இந்த நாட்டில் வாழ்க்கைச் செலவு கடந்த இரு வருடங்களிலே பல மடங்கு அதிகரித்துள்ளது; வறுமையும், வேலையின்மையும் மக்களை வாட்டுகிறது; உரம் மற்றும் மண்ணெய் போன்றவற்றிற்கான மானியக் குறைப்பின் காரணமாக விவசாயிகள், மீனவர்களின் வாழ்வாதாரங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன; வட்டி வீத அதிகரிப்பு சிறிய வியாபாரிகள் வருவாயில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது; கட்டடத் துறையில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி காரணமாக நகர்ப்புற முறைசாரா மற்றும் கிராமப் புற மக்களின் தொழில்வாய்ப்புக்கள் குறைந்துள்ளன; வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் புடைவைக் கைத்தொழிலிலும், பெருந்தோட்டங்களிலும் வேலைசெய்யும் பெண்களின் மெய் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது; போக்குவரத்து, எரிபொருள், மின்கட்டணங்களின் அதிகரிப்பினால் ஆசிரியர்கள் உள்ளடங்கலான அரச துறையில் பணி புரிவோர் மோசமான பாதிப்புக்களை எதிர்கொள்ளுகிறார்கள். அரச செலவு குறைக்கப்பட்டிருப்பதால் இலவசக் கல்வி, இலவச சுகாதாரத் துறைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிகளவான மக்கள், குறிப்பாக இளைஞர்கள், வேலைவாய்ப்புக்களைத் தேடி வேறு நாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை நாம் தமிழ் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் அவதானிக்கிறோம். போதைப் பொருள் பாவனையின் அதிகரிப்பு, இளைஞர்களிடையே அதிகரிக்கும் ஆயுதக் கலாசாரம் மற்றும் வன்முறை, இந்திய இழுவைப் படகுப் பிரச்சினை போன்றன வடக்கினை மேலதிகமாகப் பாதிக்கும் விடயங்களாக அமைகின்றன.

நிலைமை இவ்வாறு மோசமடைந்து செல்லுகையிலே நாட்டினைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய அரசியல்வாதிகளிலே பலர் தொடர்ந்தும் அமைச்சர்களாக இருக்கிறார்கள். ஊழலிலே ஈடுபட்டு நாட்டின் வளங்களையும் செல்வத்தினையும் கொள்ளையிட்டவர்கள் இன்றும் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய ஆட்சியாளர்கள் மிகவும் மோசமான முறையில் இந்த நாட்டினைக் கடந்த ஐந்து ஆண்டுகளிலே ஆட்சி செய்திருக்கிறார்கள். மக்கள் இந்த நிலைமைகளினால் மிகவும் அதிருப்தியுற்றிருக்கிறார்கள்.

இவ்வாறானதொரு நிலையிலேயே 2022 இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் மையமாக இருந்த 'கட்டமைப்பு மாற்றம் வேண்டும்' (றீதீவிமிளது ளீஜூழிஜஆள) என்ற கோசம் தற்போதைய தேர்தற் காலத்திலே நாட்டிலே, குறிப்பாகத் தென்னிலங்கையிலே, ஓங்கி ஒலிப்பதனை நாம் ஒவ்வொரு நாளும் காண்கிறோம். போராட்டத்தின் மூலம் ஏற்படாத மாற்றங்களைத் தேர்தலின் மூலமாவது ஏற்படுத்த வேண்டும் என்பதிலே தெற்கில் இருக்கும் மக்கள் ஆர்வமாக இருப்பதனை உணரக் கூடியதாக உள்ளது.

இவ்வாறானதொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலினை வடக்குக் கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழும் சிறுபான்மை மக்கள் கவனமாகவும், புத்திசாலித்தனத்துடனும் கையாளவேண்டியது அவசியம். தென்னிலங்கையிலே பல தசாப்தங்களுக்குப் பின்னர் இனவாதத்தினை முன்னிறுத்தாத தேர்தற் பிரசாரத்தினைப் பிரதான வேட்பாளர்கள் முன்னெடுப்பதாக நாம் அறிகிறோம். மக்களின் நலனினை முன்னிறுத்தும் பொருளாதார ரீதியான மாற்றங்கள், ஆட்சி முறையில் மாற்றம், ஊழல் ஒழிப்புப் போன்ற கோசங்களினை முன்வைக்கும் வேட்பாளர்களின் பின்னால் தென்னிலங்கை மக்கள் பெருமளவிலே திரளுவதனை நாம் தேர்தற் கூட்டங்களிலே காண்கிறோம்.

தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் இந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தித் தென்னிலங்கையில் மாற்றத்துக்காக எழுச்சி பெற்றிருக்கும் மக்களுடன் இந்தத் தேர்தலிலே பயணிப்பது குறித்து ஆராய வேண்டும். அதேநேரம் நாட்டினைக் கடந்த ஐந்து ஆண்டுகளிலே மோசமான நிலைக்குத் தள்ளியோரினைத் தோற்கடிப்பதுவும் அவசியம்.

இனப்பிரச்சினைத் தீர்வு, மதச்சார்பற்ற அரசினை உருவாக்குதல், போர்க்குற்றங்களை விசாரித்தல் போன்ற விடயங்களிலே பிரதானமான வேட்பாளர்கள் முற்போக்கான நிலைப்பாடுகளை எடுக்காமை குறித்து நாம் சுட்டிக்காட்ட வேண்டிய அதேவேளை, பொருளாதார நெருக்கடியும், ஊழலினால் ஏற்படும் பொருளாதார, அரசியற் சீர்கேடுகளும் சிறுபான்மை சமூகங்களையும் மோசமாகப் பாதித்துள்ளன என்பது குறித்து நாம் விழிப்புணர்வுடன் இந்தத் தேர்தலிலே செயலாற்றுவது அவசியம். இனத்துவ ரீதியாக மாத்திரமல்லாது, வர்க்க ரீதியாகவும், சாதிய ரீதியாகவும், பால்நிலை ரீதியாகவும் அரசின் அடக்குமுறை எவ்வாறு எம்மைப் பாதிக்கிறது என்பது பற்றி சிந்திப்பது அவசியம். நாம் எமது ஜனாதிபதித் தெரிவினை மேற்கொள்ளுகையிலே தனியே இனப்பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வுகளுக்குள் மாத்திரம் குறுக்கிவிடாது, நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் பொருளாதார சூழ்நிலை குறித்தும் பகுத்து ஆராய்வது அவசியம். அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இருந்து எம்மை நாமே புறமொதுக்காது இருப்பதனை உறுதி செய்யலாம். நாம் தனிமைப்படுத்தப்படாது, எமது அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களைத் தென்னிலங்கை மக்களுடன் சேர்ந்து எதிர்காலத்திலே வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவது குறித்து இந்தத் தேர்தற் காலத்திலே சிந்திக்க வேண்டும்.

சர்வதேசத்தினால் தான் எமக்கு அரசியற் தீர்வு கிடைக்கும் என்ற அதீத நம்பிக்கை குறித்தும் நாம் விழிப்புடன் இருப்பது அவசியம். இன்றுள்ள சூழலிலே அந்த நம்பிக்கையின் அடிப்படையில் மாத்திரம் நாம் எமது தேர்தற் தெரிவுகளை வெளிப்படுத்துவது அரசியல் ரீதியாக உண்ணாட்டிலே எம்மை மேலும் பலவீனப்படுத்தக் கூடும். பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிக எண்ணிக்கையிலே எமது இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலையினை நாம் முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமாயின், எமது சமூகங்களிலே பொருளாதார ரீதியில் நலிவுற்ற மக்களின் வாழ்க்கையிலே மாற்றங்களை உருவாக்கக்கூடிய வகையிலே நாம் தேர்தல்களிலே வாக்களிப்பது பற்றி சிந்திக்க முற்பட வேண்டும்.

இவ்வாறான காரணங்களினால் தமிழ்த் தேசிய அரசியலினை மாத்திரம் முன்னிறுத்தி, சர்வதேச கவனத்தினை ஈர்ப்பதனை நோக்கமாகக் கொண்டு தேர்தலிலே வாக்குக் கோருவதும், தமிழ்த் தேசிய அடிப்படையிலே தேர்தலினைப் புறக்கணிப்பதுவும் அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்குப் பின்னடைவினை ஏற்படுத்தக் கூடும். பொருளாதார ரீதியிலே மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் எமது சமூகங்களும், ஊழல் மற்றும் ஏனைய சீர்கேடுகளினால் பாதிக்கப்பட்டுள்ள எமது பொதுநிறுவனங்களும் முன்னேறுவதற்கு இந்தத் தேர்தல்கள் ஏதாவது வழியில் சந்தர்ப்பங்களைத் திறக்குமா என நாம் சிந்திப்பது அவசியம். இதன் மூலம் எமது பொருளாதார நிலையிலும் நாம் முன்னேற்றங்களைக் கொண்டு வர முடியும். தென்னிலங்கையில் இனவாதம் சற்று அடங்கி இருக்கும் இந்த வேளையிலே, ஒட்டுமொத்த இலங்கையிலும் ஜனநாயகத் தன்மை மிக்க, இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தினை வலியுறுத்தும், அரசியல் மாற்றம் ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பாக நாம் இந்தத் தேர்தலினை நோக்குவது பொருத்தமாக இருக்கும் என நாம் கருதுகிறோம்.

இந்த அடிப்படையிலே தற்போதைய ஆட்சியாளர்களை நிராகரித்து, முற்போக்கானதும், ஊழலுக்கு எதிரானதும், நாட்டினதும் மக்களினதும் பொருளாதார மீட்சியிலே அக்கறை கொண்டதும், 2022 இல் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது எழுச்சியுற்ற முற்போக்கான அரசியற் பொருளாதார மாற்றங்களுக்கான கோசங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கக்

தொடர்ச்சி 9ம் பக்கம்....



## தமிழ்த் தேசிய...

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

கூடியதும், நம்பகத்தன்மை மிக்கதும், சட்டத்தின் ஆட்சியினையும், நீதித் துறையின் சுதந்திரத்தினையும் உறுதிசெய்யக்கூடியதும், இனங்களை ஒற்றுமைப்படுத்தக்கூடியதுமான ஒரு எதிர்காலத்தினை நோக்கி தமிழ் மக்களும், ஏனைய சிறுபான்மை மக்களும் வாக்களிப்பது பொருத்தமாக இருக்கும் என நாம் கருதுகிறோம். இதன் மூலம் சுதந்திரத்துக்கும், சமத்துவத்துக்குமான கதவுகளை படிப்படியாகவேனும் எம்மால் திறக்க முடியும்.

## நோயாளி....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வெளியேற்றுவதே எமது நோக்கம்.

ஐஆகு என்ற மருத்துவமனையிடம் நான் கதைத்தேன். நோயாளியை குணப்படுத்துவதற்கு கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர். அவசரமாக தேவைப்படும் மருந்துகளையும் ஆக்ஸிஜனையும் அவர்கள் வழங்குகிறார்கள். எனவே, அவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை என்றால், நோயாளியை குணப்படுத்த முடியாது.

வரிகளைக் குறைப்பதன் மூலம் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. அப்போது வருமானம் குறையும். அப்போது ஒக்சிஜன் குறைந்துவிட்டால், நோயாளிக்கு ஆபத்து ஏற்படும்.

எனவே நோயாளி குணமடைந்து வரும் நிலையில், வைத்தியரை மாற்றி தகுதியற்ற வைத்தியரிடம் நோயாளியை ஒப்படைப்பதா என்பதை, இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

இன்று நாட்டின் பொருளாதாரம் ஓரளவு ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது. 2025 ஆம் ஆண்டளவில், நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்புடன் ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வலுவடையும்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான அடிப்படைப் பணிகளை 2026ஆம் ஆண்டுக்குள் செய்து முடிக்க நான் எதிர்பார்க்கிறேன். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2027 வரை அதற்கான கால அவகாசம் எமக்குக் கிடைத்துள்ளது.

ஆனால் 2025 ஆம் ஆண்டில், மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதன் மூலம் 2026 ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை விரைவாக முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். அதன்போது, நாம் புதிதாக சிந்திக்க வேண்டும். நாம் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்குச் செல்வது மிகவும் முக்கியம்.

விவசாய நவீனமயமாக்கல் மற்றும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்காக நாம் முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தை நான் இங்கு குறிப்பிடமாட்டேன். ஆனால் நாம் மருத்துவ சுற்றுலாத் துறை பற்றி கதைக்க வேண்டும். அதற்காக மருத்துவமனைக் கட்டமைப்பை முன்னேற்ற வேண்டும்.

உலக மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப சுகாதாரத் துறையில் ஏற்படும் வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், உலகில் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஜப்பான், கொரியா, சீனா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பாவில் அந்த வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தாதியர் தொழில்துறை தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறி வருகிறது. அதற்குத் தேவையான பயிற்சியை நமது தாதியர்களுக்கு வழங்க வேண்டும். அதன்போது புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தாதியர் பயிற்சிக் கல்லூரிகளை அதிகரிக்க முடியும்.

தேவையெனில், வெளிநாட்டு விரிவுரையாளர்களை பெற்றுக் கொள்ளலாம். ஜப்பானில் அதிகரித்துவரும் சனத்தொகையால், எதிர்காலத்தில் தாதியர்களுக்கான தேவை, சுமார் 02 இலட்சம் ஆக அதிகரிக்கலாம். மேலும், இலங்கையிலும் இதற்கான தேவை அதிகரித்து வருகிறது.

அதற்காக நாம் ஊயசந ர்ழஅந என்ற கருத்தை உருவாக்கலாம். மேலும், சமூக சேவைகள் அமைச்சில் முதியோர் மற்றும் அங்கவீனமுற்றோருக்கான தனிப் பிரிவு பேணப்பட வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, நோயாளி ஒரே நேரத்தில் சாதாரண வார்டுக்கு மாற்றப்படுவதில்லை. மேலும், நோயாளியை சமூக சேவை விரிவுரையாளரிடம் ஒப்படைக்கவும் வேண்டாம். எனவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து அடைந்த பொருளாதார முன்னேற்றத்தை முன்னெடுத்துச் சென்று நாட்டைக் கட்டியெழுப்புவோம் - என்றார்.

## ராஜபக்சக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இரத்தினபுரி நகரில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்கொண்ட சவால்களை இன்றும் எதிர்க்கொள்கிறோம். நாட்டுக்கு சிறந்த சேவையாற்றியதன் பின்னரே மக்களாணையை மீண்டும் கோருகிறோம். தேசிய விவசாயத்துறையை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு உரிய வசதிகளை வழங்கினோம். இறக்குமதி உற்பத்திகளுக்கு நாங்கள் முன்னுரிமை வழங்கவில்லை.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்தினால் மாத்திரமே விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும். எமது ஆட்சி ஆரம்பித்த அபிவிருத்தி கருத்திட்டங்களையே நல்லாட்சி நிறைவு செய்தது, தற்போதைய ஆளும்தரப்பும் நிறைவு செய்கிறது. பிரதேசங்களுக்கு பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களையே நாங்கள் முன்னெடுத்தோம்.

வெளிநாட்டு முதலீடுகளுக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. கிடைக்கும் முதலீடுகளினால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் கிடைக்கும் பயன் என்னவென்பது பற்றி மாத்திரமே ஆராய்வோம். தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கியே செயற்படுவோம்.

எம்மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகிறது. சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை திரட்டி அவற்றை வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. குற்றச்சாட்டுக்களை நிரூபித்து உலகில் எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தாலும் அதனை எதிர்க்கொள்ள தயார்.

எம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் ஒரு பகுதி கோப்பு அநுர குமார திஸாநாயக்கவிடம் உள்ளது, பிறிதொரு பகுதி கோப்பு ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ளது. ஆதாரம் உள்ளதாக குறிப்பிடுகிறார்கள். ஆனால் இதுவரை நிரூபிக்கவில்லை. ஆகவே எம் மீதான குற்றச்சாட்டுக்கள் வெறும் அரசியல் சேறு பூசலாகவே காணப்படுகிறது என்றார்.

## உஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகிய அவரின் மருமகன் திரு ரணில் விக்கிரமசிங்கவரை அனைத்து சிறிலங்காவின் சனாதிபதிகளும் தமிழ் மக்களின் உரிமைகளை ஒடுக்குவதிலும், எமது நிலங்களை ஆக்கிரமிப்பதிலும், எமது சமய கலாசார விழுமியங்களை சீரழிப்பதிலும், எமது வளங்களை அந்நியர்களுக்கு தாரை வார்ப்பதிலுமே கூடிய கவனம் செலுத்தினர். அதேவேளையில் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியலில் எவ்விதமான நன்மைகளையும் இத்தேர்தல் வழங்கப் போவதில்லை. இதுவரை நடந்த தேர்தல்களில் இத்தேர்தலே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையை முற்றாக புறந்தள்ளி சிங்கள தேசத்தின் பொருளாதார பிரச்சினையை மையப்படுத்தியே கட்டமைக்கப்படுகின்றது. சிறிலங்காவின் படுபாதகமான பொருளாதார வீழ்ச்சிக்கு தீர்க்கப்படாத இனப்பிரச்சனையே முக்கிய காரணம் என்பது கூட வசதியாக இன்று மறைக்கவும் மறக்கவும் படுகின்றது.

ஆயினும் இந்த தேர்தலானது தமிழர் தேசம் மீது இன்று திணிக்கப்பட்டுள்ளது. தமிழர் மீது திடீர் பாசம் கொண்ட சிங்கள வேடதாரிகள் எமது தேசம் எங்கும் இன்முகத்துடன் வலம்வந்து வாக்கு சேகரிக்கின்றனர். இதில் தமிழராகிய நாம் எந்த சிங்கள வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க முடியாது. தமிழ் பொதுவேட்பாளருக்கு மட்டும் சங்கு சின்னத்திற்கு வாக்கு அளிப்பதன் மூலம் தமிழர் தேசம் என்றுமே சிங்கள ஆட்சி அதிகாரத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற செய்தியினை வெளி உலகிற்கு வெளிப்படுத்தவேண்டும். இரண்டாம் விருப்பு வாக்கு என்ற விடயத்தை தமிழர்கள் முற்றாக புறந்தள்ள வேண்டும். ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாக எவ்வித வாக்குறுதிகளையோ அல்லது கரிசனைகளையோ வெளிப்படுத்தாத சிங்கள வேட்பாளர்களை ஆதரிக்க துடிக்கும் எந்த தமிழர் தரப்பையும், குறிப்பாக போலி தமிழ் தேசியத்தை நுனிநாக்கில் பேசிக்கொண்டு சிங்கள பேரினவாதத்திற்கு சேவகம் செய்யும் அனைவரையும் தமிழ் மக்கள் எமது அரசியல் வெளியிலிருந்து முற்றாக அகற்ற வேண்டும்.

நாம் பலமாக இருந்த காலத்திலேயே சர்வதேச முன்னிலையில் சிங்கள தேசத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தீர்வுகளின்றி கபடத்தனமாக முடக்கப்பட்டன. எமது வரலாற்று பாடத்தினூடாக இலங்கை தீவுக்கான புதிய அரசியல் யாப்பினூடாகவோ, பேச்சுவார்த்தைகள் ஊடாகவோ அல்லது உள்ளூர் பொறிமுறைகள் ஊடாகவோ தமிழ் மக்களின் பிரச்சனை நீதியான முறையில் தீர்க்கப்படாது. தமிழ் மக்களின் தேசிய கேள்விக்கு தமிழ் மக்களிடையே சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் ஒரு சர்வசன வாக்கெடுப்பினூடாகவே தான் ஓர் நிரந்தர அரசியல் தீர்வினை அடைய முடியும் என்பதை நாம் திடமாக நம்புகின்றோம். நிரந்தரமான தமிழர் தேசம் இந்த பூமிப்பந்தில் உதிக்க தொடர்ந்தும் பாடுபடுவோம் என உறுதி எடுத்துக்கொள்வோம்.

## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தொழிற்சாலையை நிறுவ 2015இல் அனுமதி வழங்கியிருந்தோம். ஆனால் அன்றிலிருந்து இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டன. இறுதியாக, 2019இல் தொடங்கப்படவிருந்த இந்தத் திட்டம், கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தடைப்பட்டது.

நான் ஜனாதிபதியான பின்னர், இந்தத் திட்டங்கள் அனைத்தையும் மீண்டும் ஆரம்பித்து வைத்தேன். அதன்படி இன்று வெஸ்டர்ன் ஓட்டோமொபைல் நிறுவனத்தின் பணிகள் தொடங்கியுள்ளன. இந்த தொழிற்சாலை ஆண்டுக்கு 50,000 வாகனங்களை சந்தைக்கு விநியோகிக்கும் திறன்கொண்டது. இதன் மூலம் நமது ஏற்றுமதித் துறையை வலுப்படுத்த முடியும்.

இந்த தொழிற்சாலையை இரண்டே ஆண்டுகளில் தொடங்க இருந்தபோதும், இதற்காக எங்களுக்கு 10 ஆண்டுகள் எடுத்தது. பலர் இதற்கு எதிராக செயல்பட முயன்றனர். இதற்கு ஆதரவாக செயற்பட யாரும் முன்வரவில்லை. அவர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தை நிறுத்த முயற்சித்தனர். இத்தொழிற்சாலையின் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வாய்ப்புகளை இழந்துள்ளோம். எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிலை ஏற்பட இடமளிக்க மாட்டேன்.

இந்த திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். இத்தொழிற்சாலை குளியாப்பிட்டியின் அபிவிருத்தியின் ஒரு அங்கம் என்றே கூற வேண்டும். இத்துடன் குளியாப்பிட்டியின் அபிவிருத்தி ஆரம்பமாகிறது. பிங்கிரியில் ஆயிரம் ஏக்கர் முதலீட்டு வலயத்தை உருவாக்குகிறோம். அத்துடன், இரணவில பிரதேசத்தில் 500 ஏக்கர் சுற்றுலா வலயத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த பகுதிகளில் சுற்றுலா மற்றும் உற்பத்தி வலயமொன்று உருவாக்கப்படும்.

இந்தப் புதிய வேலை வாய்ப்புகளுக்கு பயிற்சி பெற்ற பணியாளர்கள் தேவைப்படுவர். எனவே, பொறியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். குருநாகல் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிறுவ இருக்கிறோம். நாம் 21ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியை நோக்கிச் செல்ல வேண்டும். அதனை விட்டுச் செல்ல முடியாது.

சீன நிறுவனங்கள் இந்த முதலீடுகளுக்கு வருவது போல் இன்று ஐரோப்பிய நிறுவனங்களும் வருகின்றன. நாங்கள் வங்கு ரோத்து நிலையிலிருந்து உத்தியோகபூர்வமாக விடுபடும்வரை அவை காத்திருக்கின்றன. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் வழங்கிய 18 நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளோம். தற்போது தனியார் பிணைமுறி வழங்குநர்களுடன் இறுதிகட்ட பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம். அந்த உடன்படிக்கைகளின்படியே நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

வடமேல் மாகாணத்தில் பெரும் அபிவிருத்தியை மேற்கொள்ள முயற்சிக்கிறேன். கம்பஹா எவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டதோ அதேபோன்று வடமேற்கு பிரதேசமும் முன்னேற்றப்படும். அதன் ஒரு அங்கமாக இந்த தொழிற்சாலையைக் குறிப்பிடலாம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





# ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ரணில் பதுளையில்ல் வெல்வது உறுதி

## செந்தில் தொண்டமான் அபரிமித நம்பிக்கை

( எச் எம் ஹலால்தீன் )

ஜனாதிபதியின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பதுளையில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கபதுளைமாவட்டத்தில் வெற்றி பெறுவார் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு ,கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பகுதிகளில் ரணிலுக்கு ஆதரவு வலுப்பெற்று வருகிறது.கடந்த ஒரு வார காலத்தில் செல்லும் இடமெல்லாம் ஜனாதிபதி ரணிலுக்கான ஆதரவு வலுப்பெற்றுள்ளது. அதற்கான காரணத்தை ஆராயும் பொழுது, மக்களால் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு பிறகு காஸ், பெற்றோல் வரிசையில் மீண்டும் நிற்க முடியாது எனவும் தாங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பதுளை மாவட்டத்தில் ரணிலின் வெற்றி ஒரு லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்று வெற்றி பெற உறுதி செய்யப்பட்டுள்ளது. பதுளை மாவட்டத்தில் சேவை செய்த அனைவரும் இந்த மேடையில்அமர்துள்ளோம். சேவைசெய்யாதவர்கள் எதிர் தரப்பினருடன் அமர்ந்துள்ளனர்.மக்களை பொறுத்த மட்டில் சேவை செய்தவர்களுக்கு ஆதரவு அளிப்பதில் மாற்று கருத்து கிடையாது.

நான்ரணில்விக்கிரமசிங்கவிற்காகபிரசாரத்திற்காக வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என நான்கு திசைகளிலும் சென்றுள்ளேன். அவருக்கான ஆதரவு அதிகமாகவே உள்ளது.

ஜனாதிபதியின் வெற்றிக்கு பின்னால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்களும் உள்ளனர். அதே போல தேர்தலுக்கு பின் மலையக மக்களின் வெற்றிக்கு பின்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்க வேண்டும் என செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

(05)

# சிதைவடைந்த நிலையில் சடலம் நிட்டம்புவில் மீட்பு

நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுகொட பிரதேசத்தில் திங்கட்கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும்சடலமானதுஅடையாளம் காண முடியாத அளவிற்கு சிதைவடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக வதுப்பிட்டிவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் கைது

நாட்டின் வெள;வேறு பகுதிகளில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, புலத்சிங்கள பகுதியில் 05 கிராம் 470 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். புலத்சிங்கள பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவரே கைது செய்யப்பட் டுள்ளார்.

இந்நிலையில், கம்பஹா பகுதியில் 05 கிராம் 270 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கம்பஹா பகுதியைச்சேர்ந்த 47 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பேருவளை - கரந்தகொடை பகுதியில் 258 கிராம் 960 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருவளைபகுதியைச்சேர்ந்த 50 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



# தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி வேட்பாளர் அனுரகுமாரவுக்கு ஆதரவு

தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்கவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் எம்.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது கட்சி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது தொடர்பில் உயர்மட்ட குழு கூடி ஆராய்ந்தது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நாம் எமது முடிவை வெளியிடுகின்றோம்.

தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் வடபகுதிக்கு வருகை தந்து பல கட்சிகளிடமும் தமது ஆதவை கோரி வருகின்றனர். எமது கட்சி 2019 ஆம் ஆண்டு நிறுவன ரீதியாக உருவாக்கப்பட்ட கட்சி. இந்தநிலையில் பல ஜனாதிபதி வேட்பாளர்கள் எமது ஆதவையும் கோரியிருந்தார்கள். எமது கட்சியின் உயர் பீடம் ஆராய்ந்ததன் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடும் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் வெற்றி பெறுவதன் மூலமே இந்த நாட்டை ஊழல் அற்ற ஒரு நாடாக மாற்ற முடியும். இன்று முழு நாடும் அனுரவுடன் நிற்கின்றது. மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். அந்த மாற்றத்தில் நாமும் பங்காளராகி எமக்கான தேவைகளைப் பெற தேசிய மக்கள் சக்திக்கு எமது ஆதரவை தமிழ் மக்கள் வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

(05 - 100)



# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மூலம் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து பிரசாரம்



(எம்.ஏ.றமீஸ்)

தேர்தல் அண்மித்துள்ள இக்காலப் பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பகுதியில் பல்வேறு தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இதற்கமைவாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் மூலம் இக்றஹ் வட்டாரத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் பல்வேறான பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை மத்திய குழு பிரதி அமைப்பாளரும், முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் பிரதி தவிசாளருமான எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் பிரசார கூட்டங்கள், மக்கள் சந்திப்புகள் ஆகியன இடம்பெற்று வருவதுடன் தேர்தல் விஞ்ஞாபனம், துண்டுப் பிரசுரங்கள் போன்றனவும் விநியோகிக்கப்பட்டும் வருகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, ஆலம்குளம், தீகவாபி, சம்புநகர் ஆகிய பிரதேசங்களில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை வெற்றி பெறச் செய்யும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் புகைப்படத்தை பொறித்த தீப்பெட்டி நுவரெலியாவில் விநியோகம்

## பெப்ரலுக்கு முறைப்பாடு

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் புகைப்படம் மற்றும் தேர்தல் சின்னம் பொறித்த தீப்பெட்டிகளை குழு ஒன்று நுவரெலியாவில் விநியோகித்ததாக பெப்ரல் அமைப்புக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2024இல் வெளியிடப்பெற்றது